விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 16 சனிக்கிழமை (02.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 318

# உயிருடன் பிடிபட்ட பின்பே இசைப்பிரியா படுகொலை!

## ஆதாரம் வெளியிட்டது சனல் 4



விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செய்தி வாசிப்பாளராக பணி புரிந்த இசைப்பிரியா, வன்னிப்போரின இறுதிக்கட்டத்தில் கைகள் கட்டப்பட்ட நிலையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்த புகைப்படங்களை வெளியிட்டிருந்த சனல் 4 தொலைக்காட்சி, தற்போது இசைப்பிரியா உயிருடன் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு அழைத்துவரப்படும் காணொளியை வெளியிட்டுள்ளது.

இசைப்பிரியா தொடர்பாக சனல் 4 வெளியிட்டுள்ள இப்புதிய போர்க்குற்ற ஆதாரம், பொது நலவாய மாநாடு ஆரம்பமாவதற்கு



இசைப்பிரியா

14 நாட்களுக்கு முன்னர் வெளியாகியிருப்பது இலங்கை மீதான சர்வதேச அழுத்தத்தை மேலும் அதிகரிக்கும் எனக் கருதப்படுகிறது.

இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை ராணுவத்தினரால் 20-ம் பக்கம் பார்க்க

## குற்றங்கள் குறைந்த இடமாக யாழ்ப்பாணம்

ஆசியாவிலேயே குற்றங்கள் குறைந்த இடமாக யாழ்ப்பாணம் காணப்படுவதாக யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான நிசங்க சமன் சிகரோ தெரிவித்துள்ளார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னிலங்கையில் இடம் பெறும் குற்றங்களை விட மிகவும் குறைந்தளவிலேயே யாழ்ப்பாணத்தில் குற்றங்கள் இடம்பெறுகின்றதுடன், குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டும் உள்ளார்கள்.

மேலும் யாழ்ப்பாணத்தில் குற்றச் 20-ம் பக்கம் பார்க்க

## ஐரோ. ஒன்றியம் முதலமைச்சருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வருமாறு வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டேவிற் டெலி நேரில் அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரை நேற்று பிற்பகல் யாழ். கோவில் வீதியிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து கலந்துரையாடியபோதே ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இதனை ஊடகவியலாளர்களுக்கு முதலமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-6)

# வீடுகள் இடிக்கப்படுவதை நிறுத்த ஜனாதிபதி உத்தரவு

## சம்பந்தனின் முறையீட்டையடுத்து


வலிகாமம் வடக்கில் படையினரால் பொதுமக்களின் வீடுகள் இடித்தழிக்கப்படுவதை நிறுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவிற்கு உத்தரவிட்டுள்ளார். இந்த தகவலை ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தனிடம் தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார்.

(19-ஆம் பக்கம் பார்க்கவும்...)




## தமிழர் பிரச்சினை விடயத்தில் ஜனாதிபதி பக்கச் சார்பானவர்

### அடித்துக் கூறுகிறார் முதலமைச்சர்




போரினால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுடைய பிரச்சினைகளை ஜனாதிபதி பக்கச்சார்புடன் அணுகுவது பிழையென சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஹெகலிய ரம்புக்வெலவுடன விவாதித்துக்கொண்டிருக்க வேண்டிய தேவை தனக்கு இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் முதற்தடவையாக வருகைதந்த இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டேவிற் டெலி வடக்கு மாகாண முதலமைச்சரை யாழ்.கோவில் வீதியிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் பிற்பகல் 2 மணியளவில் சந்தித்து கலந்துரையாடினார். இந்தச்சந்திப்பினையடுத்து ஊடகவியலாளர்களுக்கு முதலமைச்சர் கருத்துக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

எங்களுடைய நாட்டிலே நாங்கள் சமாதானத்துடன் 20-ம் பக்கம் பார்க்க

## முதலமைச்சரின் அழைப்பை ஏற்றார் மன்மோகன் சிங்!



வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் அழைப்பை இந்திய பிரதமர் மன்மோகன்சிங் ஏற்றுக்கொண்டுள்ளார். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யுமாறு இந்திய பிரதமரிடம், விக்னேஸ்வரன் கடிதம் ஊடாக கோரியிருந்தார். இந்த கோரிக்கையை பிரதமர் ஏற்றுக்கொண்டதாக இந்திய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வடக்கு தமிழ் மக்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் பிரதமர் இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்கக் கூடுமென நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. விக்னேஸ்வரனின் கடிதம் கிடைக்கப்பெற்றதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் செயிட் அக்புர்டீன் தெரிவித்துள்ளார். இந்த அழைப்பு குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கில் தேர்தல் நடத்துவதற்கும் ஏனைய விவகாரங்களுக்கும் இந்தியா வழங்கி வரும் உதவிகளுக்கு விக்னேஸ்வரன் நன்றி பாராட்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். பல்வேறு காரணிகளைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாண விஜயம் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-4)

## தாக்குதலுக்கு இலக்கான குடும்பஸ்தர் பலி

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த குடும்பஸ்தரொருவர் முல்லைத்தீவில் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதில் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயினைச் சேர்ந்த பியசே குமார (வயது 46) என்பவரே கொலை செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

கடந்த மாதம் 28-ஆம் திகதியன்று குறித்த குடும்பஸ்தர் தனது சகோதரன் வீட்டிற்கு காலை 10 மணிக்கு சென்றுள்ளார்.

இதன்போதே தமையனின் வீட்டிற்கு அருகில் கணவன் மனைவிக்கிடையில் தகராறு இடம்பெற்றுக் கொண்டிருந்துள்ளது.

இதனை அவதானித்த குறித்த நபர் கணவன் மனைவியினைத் தாக்குவதனைத் தடுக்க முயன்ற போது கணவன் தனது கையிலிருந்த கட்டையால 20-ம் பக்கம் பார்க்க

## சிவில் நிர்வாகத்தில் படையினர் ஆதிக்கம்

# கப்பல் கூட்டுத்தாபனத்தின் தலைவராக கடற்படைத் தளபதி

(கொழும்பு)

இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்தின் தலைவராக கடற்படையின் தளபதி நியமிக்கப்பட்டுள்ள மை நாட்டில் மேலோங்கிவரும் இராணுவமயமாக்கலின் இன்னொரு சமிக்ஞை என எதிர்ப்புகள் கிளம்பியுள்ளதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

கடற்படையின் தளபதியாக இருந்துகொண்டே இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் வைஸ் அட்மிரல் ஜயனாத் கொலொம்பகே நேற்றுமுன்தினம்புதன்கிழமைபதவியேற்றுள்ளார்.

போர்க்கப்பல்துறையில் அவருக்கு இருக்கின்ற அறிவும் தொழில் சார் அனுபவமும் கருதியே நாட் டின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தப் பதவியைக் கொடுத்துள்ளதாக இலங்கைக்கடற்படையின் பேச்சாளர் கோசல வர்ணகுல சூரிய தெரிவித்துள்ளார்.

ஆனால் இரண்டு அரச பதவிகளையும் ஒரே நேரத்தில் வகிப்பது தங்களின் தொழில்சார் அக்கறைகளில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் என்று கூறியுள்ள ட்ரான்ஸ் பேரன்ஸி இண்டர்நேஷனல் நிறுவனம்.

இது நாட்டின் வணிகத்திலும் அதிகரிக்கும் இராணுவத் தலையீடுகளையே காட்டுவதாக தெரிவித்துளளது.

மற்ற அமைச்சுகளின் கீழ் வருகின்ற பொதுமக்களின் சிவில் விவகாரங்களையும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரத்தின் கீழ் கையகப்படுத்தும் நடவடிக்கை இதுவென்று ட்ரான்ஸ்பேரன்ஸி இண்டர்நேஷனல் நிறுவனத்தின் இலங்கைக்கான தலைவர் ஜே.சி. வெலியமுன கூறியுள்ளார்.

கடல் போக்குவரத்தில் ஈடுபடும் பல நிறுவனங்களுடன் இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனம் வணிக ரீதியான போட்டியில் உள்ளது. அதே நேரம்கடல்போக்குவரத்து சட்ட ஒழுங்குகளை நிலைநாட்டுவது நாட்டின் கடற்படையின் கடமை.

இந்த சூழ்நிலையில் கடற்ப டைத் தளபதியையே கப்பல் கூட்டுத்தாபனத்துக்கும் தலைவராக நியமிப்பது இரண்டு பதவிகளுக்குமான அக்கறைகளில் முரண்பாடுகளைததோற்றுவிக்கும்என்று ஜே.சிவெலியமுன சுட்டிக்காட்டினார்.

கடற்படையின் புலனாய்வுக் கட்டமைப்பை நேரடியாகக் கட்டுப்படுத்தக் கூடிய கடற்படைத் தளபதியின் செயற்பாடுகள் வணிக கப்பலகளின் நடவடிக்கைகளை பாதிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு நிர்வாகங்களுக்கு முன்னாள் படை அதிகாரிகளை ஆளுநர்களாக நியமித்துள்ளமை உட்பட நாட்டின் பல்வேறு சிவில் விவகாரங்களுக்கு ஓய்வுபெற்ற மற்றும்பொறுப்பிலுள்ள படையதிகாரிகள் நியமிக்கப்படுகின்றமை இராணுவ ஆட்சியின் அடையாளமே என்றும் வெலியமுன பிபிசியிடம் கூறினார்.

இலங்கைக் கப்பல் கூட்டுத் தாபனம் அடுத்த இரண்டு ஆண்டு களில் 64 ஆயிரம் டன் எடையை சுமக்கக்கூடிய இரண்டு பெரிய கப்பல்களை சீனாவிடமிருந்து வாங்க உள்ளது.

இலங்கையில் 2009-ம் ஆண்டு முடிவுக்கு வந்த உள்நாட்டுப் போருக்குப் பின்னர், அங்கு சிவில் நிர்வாகங்களுக்குள் இராணுவ மயமாக்கலைக் குறைத்துக் கொள்ள வேண்டும்என்று ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையம் ஏற்கெனவே வலியுறுத்தியிருக்கிறது.

ஆனால், வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கு கின்ற இராணுவ நிறுவனங்களின் கீழ் பல்வேறு சிவில் விவகாரங்களும் உள்வாங்கப்பட்டிருப்பதாக மனித உரிமை அமைப்புகள் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டியே வருகின்றன.

இராணுவ தலையீட்டைக் குறைக்குமாறு இருக்கின்ற சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியிலும் வரவுசெலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்காக அதிகளவு நிதி அதாவது, சுமார் 25 ஆயிரத்து 300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளமையை எதிர்க்கட்சிகள் கண்டித்துள்ளதாகவும் இச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)


### தேவை

பெண்களின் ஆடைகள் தைக்க தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்புகளுக்கு: 0785665498

(4402)



### தவறிவிட்டது

க.சிறிகரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (831584513V) மற்றும் லைசென்ஸ், வரிப் புத்தகம் ஆகியன கொடிகாமத்திற்கும் நெல்லியடிக்கும் இடையில் 01/11/2013 அன்றுதொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துக்கு தயவுகூர்ந்து அறிவிக்கவும்.

T.P.:0770663624,0779268594

(சி-5345)



### விற்பனைக்கு

நம்பர் 1 நியூபேனார்ட், கிறீன் வலி (Green Valli) ஆகியகோழிக்குஞ்சுகள் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: செல்வரெட்ணம்

0778448295,
0776176370

(சி-5343)


## செயலிழந்த வைத்தியசாலை




நாடாளாவிய ரீதியில் 16 தொழிற்சங்கங்கள் இணைந்து நடத்திய சுகவீன விடுப்புப் போராட்டம் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் நேற்று நடைபெற்றது. பொதுக் கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்பட்ட இவ் சுகவீன விடுப்பினால் யாழ். போதனா வைத்தியசாலை வெறிச்சோடிக் காணப்பட்டது. (எ)

# புதுமலர்வை ஏற்படுத்தும் தீபாவளித் திருநாள்

### வாழ்த்து செய்தியில் கமல் தெரிவிப்பு

தமிழ் மக்களின் வாழ்வில் புதுவசந்தம் பிறந்திட்ட நற்சூழலில் துன்பம் எனும் இருளகன்ற தீபாவளிப் பண்டிகையை மகிழ்வுடன வரவேற்போம் என வடக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவரும ஈபிடிபியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான கந்தசாமி கமலேந் திரன் (கமல்) தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

துன்பப்பட்டு துயர் சுமந்த தமிழ மக்களின் வாழ்வில் சுபீட்சம் நிலவி புது வசந்தம் பிறந்திட்ட நிலையில், புதுமலர்வை ஏற்படுத்தும் திருநாளாக தீபாவளித் திருநாள் அமையட்டும்.

தமிழ் மக்களுக்கு புதியதும மகிழ்ச்சியான அமைதியானதுமான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக நாம் உங்களுடன் இணைந்து தொடர்ந்தும் உழைத்து வருகின்றோம். ஓர் உன்னத நோக்கத்திற்காக பயணிக்கும எமது அரசியற் பயணம் இன்னும உங்கள் உயர்விற்காய் தொடரும்.

எம்மவர்களின் ஒற்றுமைக்கு இடையூறாக இருந்துவந்த நிரந்தர பகைமைகள் நீங்கி புத்துயிர் பெற்று புதிய உறவுகள் நீடித்து நிலையான அமைதியான வாழ்வுக்கு இந்த தீபாவளித் திருநாள் வழியை ஏற்படுத்தித்தர இந் நாளில் உறுதிகொண்டு அனைத்து தமிழ் பேசும் மக்களுக்கு தீபத் திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் தீபாவளி வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். (எ-4)

# இலங்கைக்கான உதவிகள் நடுநிலையாகவே வழங்கப்படும்

### ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐரோப்பிய ஒன்றியமானது இலங்கைக்கான உதவிகளை பக்கச் சார்பின்றி நடுநிலையாகவே வழங்க விரும்புகிறது என ஒன்றியத்தின் தூதுவர் டேவிற் டெலி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் வருகைதந்த இலங்கை மற்றும மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டேவிற் டெலி வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை யாழ்.கோவல் வீதியிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்று பிற்பகல்2 மணிதொடகம் 3.30 மணி வரை இடம்பெற்ற மேற்படி சந்திப்பு தொட்பாக ஐரோபபிய ஒன்றியத்தின தூதுவர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவா மேலும் தெரி



விக்கையில்.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவராக நியமிக்கப்பட்ட பின்னர் வடபகுதிக்கு குறிப்பாக யாழ்பபாணத்திற்கு வருகை தந்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் தான் இலங்கைக்கு வருகை தந்து எனது பதவியை பொறுப்பேற்றுக்கொண்டேன்.

இந் நிலையில் இன்று (நேற்று) வடபகுதிக்கு விஜயம் செய்துள்ளேன். ஐரோப்பிய ஒன்றியமானது. இலங்கையுடன் சிறப்பாக நட்புறவைப் பேணி வருகிறது.

அத்தோடு வியாபாரத்தில் ஏற்றுமதி பங்காளராகவும் திகழ்கிறது. சுமார் 70 மில்லியன் ரூபாய் பெறுமதியான உதவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளோம். இந்த உதவி 2025ஆம் ஆண்டுவரை பயன்படுத்தப்படும்.

கடந்த வாரம் முழுவதும் வட கிழக்கு பகுதியின் பல மாவட்டங்களுக்கும் விஜயம் செய்தோம். எமது ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவித்திட்டங்களை இதன் போது பார்வையிட்டோம்.

வாழ்வாதார உதவிகள் மற்றும் வீடடுத்திட்டங்கள் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியமானது சுமார் 20 ஆயிரம் வீடுகளை கட்டிக் கொடுக்க திட்டமிட்டுள்ளது.

இதில் 16ஆயிரம் வீடுகளில் வடக்குக் கிழக்கு பகுதிகளில் இது வரை காலமும் நிர்மாணித்துள்ளது.

மிகுதி 4 ஆயிரம் வீடுகளை அமைக்கும் பணி இடம்பெற்று வருகிறது.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ள சி.வி.விக்னேஸ்வரன் இங்குள்ள நிலைமைகள் பற்றி எனக்கு எடுத்துக் கூறினார்.

அவர் நீண்டகாலத்திற்குப்பின்னர் இடம்பெற்ற வடக்குமாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்று முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்குகின்ற உதவிகளை மிகவும் நடுவு நிலையாக பக்கசார் பினறி வழங்கவே விரும்புகின்றது என்றார். (எ-6)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




அமரர்
கந்தையா சந்திரபாலன்
(சரஸ்வதி உணவக உரிமையாளர்)

திதி : சனிக்கிழமை 02.11.2013

உறவை ஊரை தவிக்கவிட்டு – நீர்
ஓடிச் சென்றீர் அவசரத்தில்
கவலைத்தீயில் வீசப்பட்டு – நெஞ்சம்
கலங்கி வாழும் கலவரத்தில்

அகிலம் இங்கு அழிந்தாலும் – வேறு
கலகம் ஏதும் நிகழ்ந்தாலும்
விலகா உங்கள் நினைவோடு விழி
காத்தே இருக்கும் கனவோடு

அகவை ஒன்று கழிந்தது உங்கள்
அழியா நினைவு தொடர்ந்தது
கவலை நெஞ்சில் மலிந்தது—எல்லாம்
காலன் செயலால் நிகழ்ந்தது.

தகவல் : மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தேனீர் கடை, வடை ஐயா
வற்றாப்பளை, முள்ளியவளை

(சி-5337)



### அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

### தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்
☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-5321)

# இன்று ஒரு தகவல்

## நட்பின் இலக்கணம்

ஒருவர் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஒரு மாதிரியாக வந்தார். என்ன விடயம்? என்று விசாரித்தேன்.

"எனது நண்பன் ஒருவனுடன் கருத்து வேறுபாடு... இனிமேல் நமக்குள் எந்த சம்பந்தமும் வேண்டாம் என்று நட்பை முறித்துக் கொண்டு வந்து விட்டேன்" என்றார்.

"நண்பர்கள் என்று இருந்தால் கருத்து வேறுபாடு வரத்தான் செய்யும்" என்றேன்.

"கருத்து வேறுபாடு வராமல் இருப்பதற்கு ஏதாவது வழி உண்டா?" என்று கேட்டார்.

"அதைப் பற்றி நிபுணர்கள் சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள்" என்றேன்.

முதல் விடயம் என்ன தெரியுமா?

உங்கள் நண்பருக்கு ஒரு செய்தி சொல்ல வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை நீங்களே நேரடியாகச் சொல்லுங்கள். அல்லது உங்கள் கைப்பட கடிதம் எழுதுங்கள்.

அதாவது நேரடித் தொடர்பு முக்கியம். அதை விட்டு விட்டு இன்னொருவர் மூலமாக நண்பர்களுக்கு செய்தி அனுப்பினால் நீங்கள் சொல்லும் செய்தி அப்படியே போய்ச் சேராது. அது எதிர் மறையாவதற்கு கூட வாய்ப்பு உண்டு. கூட்டிக் குறைத்துசொல்லி விடுவார்கள். அது குழப்பத்தில் கொண்டு வந்து விடும்.

இரண்டாவது யோசனை: நீங்கள் ஒரு நல்ல காரியத்தைச் செய்யும் போது உங்கள் நண்பரையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அவருக்கும் அதில் ஓர் ஈடுபாட்டை உருவாக்குங்கள்.

மூன்றாவது யோசனை: நம்பக்கத்தில் இருக்கும் நண்பர் மகிழ்ச்சியடைவது மாதிரி ஏதாவது செய்ய வேண்டும். சின்னச் சின்ன செயல்களாக இருந்தாலும் பரவாயில்லை. அவர் நமக்கு எதுவும் செய்யவில்லையே, நாம் எதற்கு செய்ய வேண்டும் என்று நினைக்கக் கூடாது.

நான்காவது யோசனை: உங்களுக்கு ஒரு பிரச்சினையா? அல்லது உங்கள் நண்பருக்கு ஒரு பிரச்சினையா? எதுவாக இருந்தாலும் இரண்டு பேரும் சேர்ந்து உட்கார்ந்து ஆலோசனை செய்யுங்கள்.

"நமது யோசனையும் கேட்கப்பட்டதே" என்ற நினைப்பு அவருக்கு ஒரு மனநிறைவைக் கொடுக்கும்.

ஐந்தாவது யோசனை: உங்கள் நண்பர் ஏதோ ஒரு காரியத்தைச் செய்கிறார். நீங்கள் உடனே தவறு என்று தீர்ப்புச் சொல்லாதீர்கள். அவர் அதைச் செய்வதற்கான நியாயங்கள் எவ்வளவோ இருக்கும். அதைப் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஆறாவது யோசனை: உங்கள் நண்பர் என்ன சொன்னாலும் அதைப் பொறுமையாக கேளுங்கள். அவர் சொல்வதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர் சொல்ல விரும்புவதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அவர் சொல்ல முடியாமல் தவிப்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். இப்படி மூன்று விதமாகவும் அவரைப் புரிந்து கொண்டு அதற்குத் தகுந்தாற் போல் செயல்பட வேண்டும்.

ஏழாவது யோசனை: உங்கள் நண்பர் உங்களிடம் வந்து ஏதோ ஒரு கருத்தைச் சொல்கிறார். அது உங்களுக்குப் பிடிக்கவில்லை. அதற்காக உடனே நீ சொல்வது சரியில்லை... நான் ஒத்துக் கொள்ள மாட்டேன் என்றெல்லாம் மறுத்துக் கூறாதீர்கள். அவர் சொல்வதையும் கேட்க வேண்டும். பொறுமையாக சிந்திக்க வேண்டும். அதன் பின்னர் பதில் சொல்ல வேண்டும்.

இப்படியெல்லாம் நடந்து கொண்டால் நண்பர்களுக்குள் கருத்து வேறுபாடு வராதாம். வல்லுநர்கள் தொகுத்துச் சொல்லியிருக்கும் யோசனைகள் இவை.

எனக்குத் தெரிந்து சில நண்பர்கள் உண்டு. அவர்களுக்குள்ளேயும் கருத்து வேறுபாடுகள் வராமல் இருப்பதற்கு சில நுட்பங்களைக் கையாள்வது உண்டு.

ஒருவர் சொன்னார்: "அந்த டாக்டர் சின்ன வயதிலிருந்து என்னோடு பழகியவர். நாங்கள் இருவரும் இணை பிரியாத நண்பர்கள். இருந்தாலும் கூட எனக்கு உடம்பு சரியில்லை என்றால் நான் அவரிடம் வைத்தியம் பார்க்க மாட்டேன்" என்றார்.

"ஏன் அப்படி?" என்று கேட்டேன்.

"எங்கள் நட்பு கெடக்கூடாது இல்லையா... அதனால் தான்!" என்றார் அந்த நண்பர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கூடுதலான அரச தலைவர்கள் பொதுநலவாய உச்சி மாநாட்டில்

## பங்கேற்பர் என்கிறார் அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற உள்ள பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதாக இதுவரை 37 நாடுகள் உறுதிப்படுத்தியுள்ளன. கடைசியாக அவுஸ்திரேலிய பேர்த் நகரில் நடைபெற்ற பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்ற அரச தலைவர்களை விட கூடுதலான தலைவர்கள் இம் மாநாட்டில் பங்கேற்க இருப்பதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் மன்மோகன் சிங் இம் மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் சந்தேகம் காணப்பட்ட போதும் காங்கிரஸ் மத்திய குழுக் கூட்டத்தில் அவர் பங்கேற்க வேண்டுமென முடிவெடுக்கப்பட்டிருப்பது குறித்து அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் வினவப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் கூறியதாவது;

இதுவரை பல நாட்டு தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதாக உறுதியளித்துள்ளனர். இறுதியாக நடந்த மாநாட்டை விட கூடுதல் அரச தலைவர்களின் பங்களிப்புடன் இம்முறை மாநாடு நடைபெற உள்ளது. மாநாட்டிற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் உரிய காலத்திற்குள் பூர்த்தி செய்யப்படுமென்பதில் உறுதியாக உள்ளோம் என்றார்.

பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு, கொழும்பு நகரில் இன்னும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவது குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த அமைச்சர்;

யுத்தம் முடிவடைந்த பின்னர் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பொதுநலவாய மாநாட்டிற்காக மட்டும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. பொதுநலவாய மாநாட்டிற்காக சில பகுதிகளில் அபிவிருத்திகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுநலவாய மாநாட்டிற்கு மேற்கொள்ளப்படும் செலவு குறித்து சிலர் குற்றஞ்சாட்டினாலும் மாநாட்டினால் இலங்கைக்கு கிடைக்கும் நன்மைகள் குறித்து குறைவாகவே பேசுகின்றனர் என்றார்.

ஐ.தே.க. அடங்கலான கட்சிகளுக்கு மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படாதது குறித்து ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

மாநாடு நெருங்குகையில் ஐ.தே.க. உட்பட சகல கட்சிகளுக்கும் மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படும் என்றார்.

எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பில் ஐ.தே.க. ஆர்ப்பாட்டமொன்றை நடத்த தயாராவது குறித்து கருத்து வெளியிட்ட அவர்;

இலங்கையில் மிக முக்கியத்துவமானசர்வதேசமாநாடொன்று நடைபெற இருக்கையில் இவ்வாறு ஆர்ப்பாட்டம் நடத்துவது உகந்ததா என அந்தந்த கட்சிகளே முடிவு செய்யவேண்டும். அது அவர்களது பொறுப்பு. இந்த மாநாடு ஒரு கட்சிக்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல என்றார்.

பொதுநலவாய வர்த்தக ஒன்றிய மாநாட்டில் ஆயிரம் பிரதான வர்த்தகர்கள் பங்கேற்க உள்ளனர். இம் மாநாட்டு வர்த்தகர்கள் மட்டுமன்றி சீனா, அரபு நாடுகள் உட்பட பல நாட்டு வர்த்தகர்கள் பங்கேற்கின்றனர். அவர்களுக்கு நாட்டின் எப்பகுதிக்கும் சென்று வர அவகாசம் உள்ளது. இங்கு முதலீடு செய்ய தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றார். (அ-2)

# க.பொ.த சா.த பரீட்சை அனுமதி அட்டைகள் தபாலில் சேர்ப்பு

(கொழும்பு)

இவ்வாண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று முன்தினம் தபால் மூலம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

காலதாமதமின்றி அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளிடம் சென்றடைவதற்கான ஏற்பாடாகவே அனுப்பப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளில் ஏதேனும் மாற்றம் செய்யவேண்டுமாயின், எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்கப்பட வேண்டும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வாண்டு 5 இலட்சத்து 78 ஆயிரத்து 140 மாணவர்கள் க.பொ.த சாதாரணதர பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பரீட்சைக்காக நாடளாவிய ரீதியில் 4 ஆயிரத்து 300 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 120 |
| தக்காளி | 100 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 60 |
| கோவா | 40 | 40 | 80 |
| கரட் | 80 | 40 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 220 | 180 | 240 |
| பெரிய வெங்காயம் | 150 | 120 | 160 |
| பாகற்காய் | 150 | 110 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 100 |
| கருணைக் கிழங்கு | 40 | 30 | 60 |
| பயற்றங்காய் | 100 | 90 | 120 |
| லீக்ஸ் | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 20 | 20 | 40 |
| கறிமிளகாய் | 120 | 80 | 140 |
| முருங்கைக்காய் | 40 | 40 | 80 |
| போஞ்சி | 140 | 100 | 140 |
| கீரை - 1 பிடி | 10 - 20 | 10 | 20 |
| தேசிக்காய் | 300 -350 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 30 - 60 | 50 | 35 - 50 |
| இராசவள்ளி | 200 | - | - |

# இராசி பலன்

02.11.2013
(ஐப்பசி 16, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிவரை
சதுர்த்தசி முன்னிரவு 8.11 மணிவரை
சித்திரை பின்னிரவு 12.56 மணிவரை
இராகுகாலம் 9.04-10.34 மணிவரை
சுபநேரம் 3.04-4.34 மணிவரை
போதாயன அமாவாசை
தீபாவளித் திருநாள்

**மேடம்** உடல் நலம் சீராகும், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**இடபம்** சுவாரஸ்யமான நாள், உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பகைவர்கள் விலகுவர், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், தொலைபேசிவழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்** நல்லவர்கள் தொடர்பால் நலம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், உறவினர் உதவி செய்ய முன்வருவர்.

**கடகம்** சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பெற்றோரின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிங்கம்** முற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கௌரவமான நாள்.

**கன்னி** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு வந்து சேரலாம், சில சந்தர்ப்பங்களில் கடின வார்த்தைகள் பயன்படுத்தலாம், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**துலாம்** கற்பனை மிகுதியான நாள், கொள்கைக் பிடிப்பை கொஞ்சம் தளர்த்த வேண்டி வரலாம், தேசநலனில் அக்கறை காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**விருச்சிகம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படும் வாய்ப்புண்டு, சுப செலவுகள் கூடும், சயன சுகக் குறைவான நாள்.

**தனுசு** புதிய பொருட்சேர்க்கையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் ஏற்படலாம்.

**மகரம்** எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், ஆடம்பரப் பொருட்களில் அதிக விருப்பம் காட்டுவீர்கள், கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களால் நன்மையுண்டு.

**கும்பம்** வேலைச் சுமை கூடும், எதிர்பாராத பயணங்கள் உருவாகும் வாய்ப்புண்டு, மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும், தொலைபேசித் தகவல் மனக் குழப்பத்தை அகற்றும்.

**மீனம்** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையும், உறவினர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், போசன சுகமுண்டு, வரவும் செலவும் சமமாகும்.

வளவன்

# தீபாவளியை முன்னிட்டு துடுப்பாட்ட போட்டிகள்

தீபாவளியை முன்னிட்டு நந்தாவில் அம்மன் விளையாட்டுக்கழகம் இன்று அழைக்கப்பட்ட 6 அணிகள் பங்குபற்றும் துடுப்பாட்ட சுற்றுப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது.

அணிக்கு 11 பேர் 8 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட இப் போட்டிகள் இன்று காலை முதல் நந்தாவில் அம்மன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறறவுள்ளது.

இப் போட்டிகளில் நந்தாவில் விளையாட்டு கழகம் சிந்மயபாராதி விளையாட்டுக்கழகம், ஆர்.பி.விளையாட்டுக்கழகம் குமரகோட்டம் விளையாட்டுக்கழகம் கலையொளி விளையாட்டுக்கழகம் கே.எஸ் விளையாட்டுக்கழகம் ஆகிய அணிகள் பங்குபற்றவுள்ளன.

இந் நிகழ்வின் விருந்தினர்களாக நந்தாவின் சிவசக்தி சனசமூக நிலையச் செயலாளர் சிவநாதன், சண்டிலிப்பாய்பிரதேச இளைஞர்பாராளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணங்களையும் பரிசில்களையும் வழங்கவுள்ளனர். (அ-9-23)







# தமிழக சட்ட சபையின் தீர்மானத்துக்கு ஈழத் தமிழர்கள் நன்றிக் கடன்பட்டவர்கள்

## உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் அறிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**சர்வதேச போர்க் குற்றவாளியாக மனிதவுரிமை மீறல்களின் சொந்தக்காரனாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்தக்கூடாது என்ற தமிழக அரசின் தீர்மானம் வரவேற்கத்தக்கதாகும். அவர்கள் என்றும் உலகத்தமிழர்களின் நன்றிக்குரியவர்களாவர் என உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் அகில இளைஞர் அணித் தலைவர் ச.சஜீவன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாகவும் பெரும்பான்மை சிங்கள இனத்தவர்களுக்கு இணையாகவும் வாழ இலங்கை அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும் வரைக்கும் பொதுநலவாய நாடுகள் கூட்டமைப்பில் இருந்து இலங்கையை நீக்கி வைக்கவேண்டும்.

அதே சமயம் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் பெயரளவில் கூட இந்தியா சார்பில் எவரும் கலந்து கொள்ளக்கூடாது என தமிழக சட்ட சபையில் தீர்மானம் ஒன்றினை ஏகமனதாக நிறைவேற்றப்பட காரணமான தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராமுக்கு ஈழத்தமிழ் மக்கள் தமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறார்கள்.

தமிழக அரசின் இந்த தீர்மானமானது தமிழ்மக்களது எண்ணங்களை மட்டுமல்ல உலக உணர்வாளர்கள் அனைவரதும் எண்ணத்தின் வெளிப்பாடாகவே உணர்ந்து கொள்ள வேண்டியது சர்வதேச மனிதநேயம் பற்றி பேசும் நாடுகளின் பொறுப்பாகும்.

சர்வதேச போர்க்குற்றவாளியாக மனித உரிமை மீறல்களில் சொந்தக்காரனாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் இலங்கை அரசானது தன்னைப் பாதுகாத்துக்கொள்ள மேற்படி மாநாட்டை நடாத்த பகீரதப்பிரயத்தனம் எடுத்து வரும் நிலையில் தமிழக அரசின் இந்தத் தீர்மானமானது முக்கியத்துவம் மிக்க ஒன்றாக கருதப்படுகிறது.

ஐ.நா சபை உட்பட சகல சர்வதேச நாடுகளும் இத்தீர்மானத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டு மாநாடு குறித்த ஒருமித்த முடிவை எடுக்க வேண்டியது ஒரு காலத் தேவையுமாகியுள்ளது.

சர்வதேச அழுத்தங்களை, மனித உரிமைகள் போர்க்குற்றம் ஆகியவை தொடர்பாக எதிர்கொண்டு தவிக்கும் இலங்கை அரசினை இந்த மாநாட்டில் கலந்து கொண்டு கௌரவிப்பதானது, இலங்கையை குற்றவாளிக் கூண்டில் இருந்து தப்பவைக்கும் செயலாகவே கருதப்படும்.

நியாயமற்ற நியாயங்களை காட்டி இந்தியா உட்பட பொதுநலவாய நாடுகள் இம்மாநாட்டில் பங்கேற்குமாக இருந்தால் அந்தந்த நாடுகளின மனித உரிமைச் செயற்பாடுகள் மற்றும் ஜனநாயகப் பண்பு குறித்த சந்தேகங்களை ஏற்படுத்தும் என்பதையே தமிழக அரசு காலமறிந்து மேற்கொண்ட இத்தீர்மானம் உறுதி செய்வதாக உள்ளது.

தமிழக அரசின் இந்த நடவடிக்கை வெறும இனஉணர்வின் அடிப்படையில் மேற்கொண்டதொன்றல்ல. சர்வதேச மனித நேய சிந்தனையின் அடிப்படையில் மேற் கொண்டதொன்று என்பதே முக்கியத்துவம் மிக்க செய்தியாகும்.

இதனடிப்படையில் தமிழக முதல்வரும் தமிழக அரசும் தமிழக மக் களும் உலகத் தமிழர்களின் நன்றிக்குரியவர்களாகின்றனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-



ஐரோப்பிய ஒன்றியத்திற்கான தூதுக்குழுவின் தலைவர் டேவிட்டலி தலைமையிலான குழுவினர் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.(படம்:என்.குமார்)

## விளையாட்டு நிகழ்வு

(துனாங்கிளப்பு)

தீபாவளியை முன்னிட்டு, காரைநகர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து நாளை காலை 9 மணிக்கு காரைநகர் கோகளம் மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளன.

இப்போட்டிகள்காலைநகர்பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் சி.குமுதினி தலைமையில் நடைபெறவுள்ளதுடன் துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற போட்டிகளே இடம் பெறவுள்ளன. (அ-9-37)

# இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களை மீட்டுத் தாருங்கள்

## வலி.வடக்கு மக்கள் தென்கொரிய தூதுவரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ளநிலங்களின்உரிமையாளர்களும் இடம்பெயர்ந்து தற்போது முகாம்களில் தங்கியிருக்கும் வலி.வடக்கு மக்களும் தென்கொரிய அரசியல் விவகாரங்களுக்கான பொறுப்பாளர் மாரீன்லீயிடம் நேற்றுமுன்தினம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

சபாபதிப்பிள்ளை கண்ணகிஅம்மன்முகாமில் தங்கியுள்ள வலி.வடக்கு மக்களை சந்தித்திருந்த போதே அவரிடம் இம்மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்டத்தின் வடக்குபகுதியில் அமைந்துள்ள இவ் வலிகாமம் வடக்கு பகுதியில் 45 கிராம சேவையாளர் பிரிவுகளை கொண்டுள்ளது. நாம் 1990 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தோம்.

அதன் பின்னர் 16 கிராம சேவகர் பிரிவுகளில் இன்றுவரை மக்கள் மீள்குடியமர்த்தப் படவில்லை. 7 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 27 ஆயிரம் பேர் வாழ்ந்து வந்த 6 ஆயிரத்து 54 ஏக்கர் நிலப்பகுதியிலும் மக்கள் மீள் குடியமர்த்தப்படல் வேண்டும்.

23 ஆண்டுகளாக இப்பகுதி மக்கள் நலன் புரி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். இந் நிலை காரணமாக எமது வாழ்விடங்கள் மற்றும் வழிபாட்டு தலங்கள் பராமரிப்பின்றி அழிவடைந்துள்ளன.

விவசாயம், மீன்பிடி தொழில் செய்யும் இம்மக்கள் தொழில் செய்ய முடியாமல் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். இந்திய மற்றும் பிற நாடுகளில் அகதிகளாக வாழ்கின்ற இப்பகுதி மக்களை மீண்டும் இங்கு குடியமர்த்த வேண்டும்.

இராணுவத்தினரால் பாதுகாப்பை காரணம் காட்டி பறிக்கப்பட்ட இக்காணிகளில் 2003 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றில் தொடுத்த வழக்கின் மூலம் இப்பகுதியில் மக்கள் குடியேற்றம் மறுக்கப்படுகின்றது.

இராணுவத்தினரால் துறைமுக மேம்பாடு, விமான வளர்ச்சி என பொய் கூறப்பட்டு சுவீகரிக்கப்படும் இக்காணிகளில் விடுதிகள் மற்றும் உல்லாச பொழுதுபோக்கு இடங்கள் அமைப்பதை பாதுகாப்புகாரணங்கள் என ஏற்றுக் கொள்ள முடியாது. அம்பாந்தோட்டையில் வீரக்கொற்றிய என்ற விமான நிலையம் அமைப்பதற்கு அப்பகுதி விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தமையையடுத்து அத்திட்டம் கைவிடப்பட்டது. ஆனால், இதேபோன்ற நிலை எமக்கு ஏற்பட்டுள்ள போதும் ஏன் அதேவழியை கையாள முடியவில்லை.

நாம் இடம்பெயர்ந்து சொந்த நிலங்களில் குடியமர்வதை அனுமதிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்ட ஐக்[illegible] நாடுகள் மனிதவுரிமை ஆணைக்குழுவி[illegible] தீர்மானத்தை சுட்டிக்காட்ட விரும்பு கின்றோம்.

மக்கள் தமது சொந்த நிலங்களில் குடியமர்த்த விரைவில் அவர்களது நிலங்களை அவர்களே கையாள்வதற்கு அனுமதிப்பதற்கு நீங்கள் நடவடிக்கையெடுக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-4)

# 53 நாடுகளின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் பேரணி

பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் 53 நாடுகளின் கலை, கலாசாரம், பாரம்பரியம் போன்றவற்றை பிரதி பலிக்கும் வகையில் 53 பாடசாலைகள் பங்குபற்றும் கலாசார பேரணியொன்று கொழும்பில் நடத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ரோயல் கல்லூரிக்கு முன்பாக ஆரம்பமாகும் இப் பேரணி மாலை 6.30 மணிக்கு சுதந்திர சதுக்கத்தை சென்றடைய வுள்ளது.

குறித்த பேரணியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரவேற்பார். பிரதமர் உட்பட அமைச்சர்கள், வெளிநாட்டு தூதுவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாட்டின் நாலாபுறத்திலிருந்தும் 100 தேசிய பாடசாலைகள் வர வழைக்கப்பட்டு அதிலிருந்து 53 பாடசாலைகள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டன. சுமார் 3 ஆயிரத்து 750 மாணவர்கள் இந்த பேர ணியில் பங்கேற்பர்.

53 பாடசாலைகளும் 53 நாடுகளைப் போன்று அவர்களது பாரம்பரிய உடைகள், பாரம்பரிய நடனம், அந்தந்த நாடுகளின் தேசிய பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில் பாடல்கள், நடனங்களுடன் பேரணியாக செல்வார்கள்.

பொதுநலவாய தலைவர்கள் மாநாடு நடைபெறுவதை முன்னிட்டு கல்வி அமை ச்சினால் நடத்தப்பட்ட போட்டிகளில் முதலி டத்தைப் பெற்ற தமிழ், சிங்கள, ஆங்கில மொழி மூல மாணவர்கள் மூவர் பொதுநல வாய அமைப்பின் அடுத்த தலைவரான ஜனாதிபதியிடம் மாணவர்களின் பிரகடனம் ஒன்றையும் கையளிக்கவுள்ளனர். (அ-2)

# வெளிவிவகார கொள்கைகளில் விரைவில் மாற்றம் செய்யப்படும்

இலங்கையின் வெளிவிவகாரக் கொள் கைகளில் மாற்றம் செய்யப்பட உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரி வித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண் டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்;

சுதந்திரத்திற்கு பின்னர் ஜனாதிபதி மஹி ந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங் கமே வெளியுறவுக் கொள்கைகளில் மாற்ற த்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவ தாகத் தெரிவித்துள்ளார்.

மூன்று தசாப்த காலத்திற்கு பின்னர் முதற் தடவையாக ஆசியாவில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு நடைபெறவுள் ளதாகத் தெரிவித்துள்ளார்.

இராஜதந்திர அணுகுமுறைகள் மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள் ளார். (அ-2)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை
## University of Jaffna-SriLanka

## இதழியல் டிப்ளோமா பயிற்சிநெறி
## Diploma in Journalism – 2014/2015

**புதிய கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டு பயிற்சி நெறிக்கான 2014/2015 ஆண்டுக்கான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக்காக தகுதியுடையவர்களிடமி ருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

**விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதியும் (yes) பெற்றிருக்கவேண்டும்.

**பயிற்சி வழங்கப்படும் துறைகள்**

அச்சு ஊடகம் (Print Media)
இலத்திரனியல் ஊடகம் (Electronic Media)
இணைய ஊடகம் (New Media)

**பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் பயிற்சிகள்**

செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு
றேடியோ மற்றும் ரீ.வி நிகழ்ச்சிகள் தயாரிப்பு
ஊடக நிறுவனங்களில் செயல்முறைப் பயிற்சி
சர்வதேச விரிவுரையாளர்களால் நடாத்தப்படும் செயல்முறைப் பயிற்சிகள்
ஆவணப்படத் தயாரிப்பு
சென்னைப்பல்கலைக்கழகத்துடன் இணைந்ததான மேலதிக பயிற்சிகள்

**கற்கை நெறிக் காலம் 2 ஆண்டுகள் (முழுநேரம்)**
**விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 30.11.2013.**

**கட்டணங்கள்**

| | |
|---|---|
| கற்கை நெறிக் கட்டணம் | ரூபா 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூபா 750.00 |
| நூலக வைப்புப் பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூபா 750.00 |
| நூலக பயன்பாடு | ரூபா 1,000.00 |
| மொத்தம் | ரூபா 22,500.00 |

**விண்ணப்பப் படிவங்கள்**

விண்ணப்பப் படிவங்களை இல 84, ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி யில் அமைந்துள்ள ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் ரூ100.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல 0212229873**

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்** (சி/5308).



## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

**யாழ் மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.**


| கிளையின் பெயர் | அடகுத் திகதி | ஏல விற்பனைத் திகதிஇடம் நேரம் |
|---|---|---|
| யாழ்.அதி மேற்தரக் கிளை (யாழ் கச்சேரி, யாழ் பஸ் நிலையம், விரி வாக்கற்கிளைகள் உட்பட) | 08.02.2013ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 08.08.2012ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | யாழ்.அதிமேற்தரக்கிளை 2013 நவம்பர் 9ம், 10ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| யாழ். பிரதான வீதி கிளை | | |
| கோப்பரய் கிளை | 15.02.2013ற்கு முன் னர் 6 மாதங்களுக் கும் 15.08.2012ற்கு முன்னர் 12 மாதங்க ளுக்கும் | கோப்பாய் கிளை 2013 நவ மபர் 16ம், 17ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| சுன்னாகம் மேற்தர க்கிளை (புன்னாலை க்கட்டுவன் விரிவா ககற்கிளை உட்பட) | 22.02.2013ற்கு முன் னர் 6 மாதங்களுக் கும் 22.08.2012ற்கு முன்னர் 12 மாதங் களுக்கும் | சுன்னாகம் கிளை 2013 நவம்பர் 23ம், 24ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| காங்கேசன்துறை கிளை(அளவெட்டி, இளவாலை விரிவாக்கற்கிளைகள் உட்பட) | 24.02.2013ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 24.08.2012ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | வடபிராந்திய காரியாலயம்2013 நவம்பர் 25ம், 26ம், 27ம், 28ம், 29ம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு |
| காரைநகர் கிளை | | |
| சங்கானை கிளை | | |
| மானிப்பாய் மேற்தரக்கிளை(சாவல் கட்டு விரிவாக்கற் கிளை உட்பட) | | |
| உரும்பிராய் கிளை | | |
| திருநெல்வேலி கிளை (கல்வியங்காடு விரிவாக்கற்கிளை உட்பட) | | |
| யாழ்.2ம் மேற்தரக்கிளை | 29.02.2013ற்கு முன் னர் 6 மாதங்களுக் கும்29.08.2012ற்கு முன்னர் 12 மாதங் களுக்கும் | யாழ்.2ம் மேற்தரக்கிளை2013 நவம்பர் 30ம்,2013 டிசம்பர் 1ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| கொக்குவில் கிளை | | |
| ஊர்காவற்றுறை கிளை(ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, நயினாதீவு விரிவாக்கற்கிளைகள் உட்பட) | 06.03.2013ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 06.09.2012ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும | ஊர்காவற்றுறை கிளை (வேலணை)2013 டிசம்பர் 7ம், 8ம் திகதிகளில (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

செயற்பாட்டு முகாமையாளர்
இலங்கை வங்கி (வடபிராந்தியம்)
வடபிராந்திய காரியாலயம்
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

தொலைபேசி இல.
021 222 4683
021 222 3126

(சி/5338)



# தீபத் திருநாள்

சிறப்பு மலர்
02.11.2013

## தமிழ் மக்களின் இனிய திருநாள்



இன்று தீபாவளிப் பண்டிகைப் பெரு நாள். இது தமிழ்மக்களின் இனிய திருநாள். இந்த இனிய தீபாவளிப் பெருநாளில் எண்ணெய் தேய்த்து புனித புண்ணிய நீராடி சுற்றத்தவர்களுடன்கூடியிருந்து இனிப் புப் பதார்த்தங்களை உண்டு மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியிருக்கும் அனைத்து அன்பு மக்களுக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் உள மிக மகிழ்கின்றோம் என நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தனது அருளாசிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்தத் தீபாவளிப் பண்டிகை நன்நாளில் இதுகாலும் பட்ட துன்ப துயரங்கள் விலகி இனிமேல் அன்பும் பாசமும் கலந்த அரவணைப்பும் ஆதரவும் அனைத்துத் தமிழ்மக்களுக்கும் கிடைக்கவேண்டுமென்று இறையருளை வேண்டிப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

இனிய தத்தம் உறவுகளுடன் புத்தாடையணிந்து புதுப்பொலிவுடன் புன்னகை பூத்த முகங்களுடன் எல்லோரும் இனிய தீபாவளியைக் கொண்டாடி இறும்பூதெய்தி இருக்க அம்பிகையின் பாதார விந்தங்களைப் பணிந்து வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

### கடமையில் வெல்வதே தீபாவளி

பெண்கள் தலைமைத்துவம் வெற்றி பெறுமந்த
பெறுமதியான நாளே தீபாவளி
பேறுடைய சிறுவர் பாதுகாப்பாய் வாழ
பெரிதுவக்கும் நாளே தீபாவளி
கண்களெனப் போற்றும் காசினி நமக்கென
கைகொட்டும் நாளே தீபாவளி
காலமெலாம் கீதை சொன்ன வழியிலே
கடமையில் வெல்வதே தீபாவளி

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்.




எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

தரமான மலிவான நியாயமான விலைக்கு மலிகைப் பொருட்களை
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

பமிலி சுப்பர் ஸ்பொட்

யாழ்.வீதி,
மானிப்பாய்,
சந்தைக்கு அருகாமை.

அல்லல் அறுந்து ஆனந்தம் பொங்கிட அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துகள்





V.S.P லக் ஒயில்

தயாரிப்பாளரும்
ஏக விநியோகஸ்தரும்

பரிமளா ஸ்ரோர்ஸ்

இல:26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 0212224135, 0212229165



அனைவருக்கும் தீபத் திருநாள் வாழ்த்துக்கள்

அமெரிக்கன் குடிநீருக்கான யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:

E.S.P. நாகரத்தினம் சக நிறுவனம்
E.S.P Nagaratnam & Co
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே 021 222 3096



அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்



அண்ணா உற்பத்திப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சகல பொருட்களையும் குறைவான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

அண்ணா சுப்பர் இன்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
தொ.பே: 021 321 8143




உள்ளூர் உற்பத்தியான ஜீவாகாரம் சிறியோர் முதல் பெரியோர் வரை பாவிக்க உகந்தசத்துணவு. இரசாயனக் கலவை அற்றது

உடல் வளர்ச்சிக்கு
ஜீவாகாரம்

உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் மக்கள் விரும்பி பாவிப்பது

அண்ணா தயாரிப்புக்களே!

அண்ணா கோப்பி
அண்ணா அரிசி மா
குரக்கன் மா
ஆட்டா மா
அண்ணா மிளகாய்த் தூள் வகைகள்
அண்ணா பத்தி வகைகள்
அண்ணா பற்பொடி
அண்ணா இனிப்பு வகைகள்

அண்ணா தொழிலகம்

இணுவில்,தொலைபேசி இல: 021 224 1565


# தீபத் திருநாள்

சிறப்பு மலர்
02.11.2013

Jana
077 073 1654
Digital Printing
சதுரஅடி
40/=
பனர்கள்
ஸ்ரிக்கர்கள்
பெயர் பலகை
டியூரோ பிறேம்
பந்தல் பிறின்டிங்

Manipay Road, Arukalmadam, Jaffna.
021 221 3233

## புதிய மனிதர்களாக பிரகாசியுங்கள்



அனைவருக்கும் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். இறையருளால் அனைவரும் இன்புற்று வாழ இறைவனை இந்நாளில் பிரார்த்திக்கின்றேன். இந்துக்களின் இனிய விழாக்களில் தீபாவளி தனித்துவமானது.

நரகாசுரன் என்ற அசுரத்தன்மை மிக்கவனின் கொடுமையால் பாதிப்புற்ற பக்தர்களை பரந்தாமன் காப்பாற்றிய நாளே தீபாவளி. அறத்தைக் காப்பாற்றுவதற்கு இறைவன் இறங்கி வருவான் என்ற தத்துவத்தை உணரவைக்கும் இந்நாள் குறித்த வரலாற்றை அனைவரும் உணர்வர். எனவே இந்நாளில் எங்களைச்சூழ உள்ள துன்பங்கள் அகல்வதற்கு அனைவரும் இறையருளை வேண்டுங்கள் என ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் தனது வாழ்த்துச்செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

நரகாசுரன் தன் தவறை உணர்ந்து தன்னைத் தண்டித்த நாளை தர்ம நாளாக ஒளியேற்றி வணங்குங்கள் என இறுதியில் உரைத்தான் என்பது வரலாறு. மனித வாழ்வு மிகவும் அற்புதமானது.

இப்பிறவியை சீராக சிறப்பாக பயன்படுத்த அனைவரும் முயற்சி செய்வோம்.

தாய், தந்தை, உற்றார், உறவினர் அனைவரையும் நேசிக்கும் பழக்கம் இத்தகைய திருநாட்களில் பேணப்படவேண்டும். தாய், தந்தையை நேசிக்கவேண்டிய வயதில் எவ்வித உழைப்புமின்றி ஊர் உலாவரும் உழைப்பற்ற இளைஞர்கள் சிந்தித்துச் செயற்படவேண்டும். தாய், தந்தையரை வருத்தி பல ஆயிரம் ரூபா செலவில் மோட்டார்சைக்கிள் வாங்கி வீதிகளில் நின்று வீணே அவப் பொழுதாக கழிக்கும் எம் அருமைச் சகோதரா; இந்நாளில் இருகரம் கூப்பி மன்றாடுகின்றேன். உழைப்பில் ஈடுபடுங்கள்.

வறுமைகளை விரட்டுங்கள் பெற்றோரை பேணுங்கள், புதுமைகளைச் செய்யுங்கள். புதிய மனிதர்களாக பிரகாசியுங்கள். அன்பு சகோதர சகோதரிகளே எல்லை கடந்த ஆடம்பரங்களைத் தவிருங்கள். அறிவியல் உலகில் காலடி எடுத்து வையுங்கள். நல்ல விடயங்களை சாதிக்க தயாராகுங்கள். வயதிலே மூத்தவரோடு வாதம் செய்வதை தவிர்த்து அவர்களை வாழ்த்துங்கள். உங்கள் புத்தாக்க கருத்துக்களை வயதானோருக்கு பக்குவமாக எடுத்துரையுங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்நாளை வளமாக்கலாம்.

இருள் அகன்று அனைவர் வாழ்விலும் ஒளியேற தீபாவளி வாழ்த்துக்கள்

தட்ஷா
அழகுக் கலையகமும்
பயிற்சி நிலையமும்
மணப்பெண் அலங்காரம், மணப்பெண்களுக்கான முக ஒப்பனைகள் அனைத்துவகையான முக ஒப்பனைகள், சிறுவர், மகளிருக்கான ஹெயர் கட்ஸ் & ஒயில் மசாஜ் மெனிகியூர், பெடிகியூர் & நக அலங்காரம் (Nail Arts), பேர்மிங் (Perming), ஸ்ரெயிற்னிங் (Straightening), றீ-பொண்டிங் (Re-Bonding) & கலரிங் (Colouring)
Special Bridal Packages & Wedding packages are Available
இல. 84, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 9713, 077 33 83643 E-Mail: thadsha83@yahoo.com

அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்
எஸ்.வி.முருகேசு
S.V.Murugesu
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
154, Hospital Road, Jaffna.
T.P: 021 222 8899, 021 4925831



அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்
அசோகா நகை அகம்
இல:111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6290
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம்
22 கரட் தங்க நகைகளுக்கு
ASOKA
JEWELERS


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபத் திருநாள் வாழ்த்துக்கள்
DHL EXPRESS
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விசேட கட்டணக் கழிவு!!!
11kg, 25Kg மேற்பட்ட பொதிகளுக்கு DHL இனால் வழங்கப்படும் விசேட விலைக்கழிவனை பெற்றுக்கொள்ளலாம்.
சகல நாடுகளுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்

திருமுருகன் கொம் நெற்
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
(ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
(கனகபுரம் பஸ்தரிப்பிடத்தில் இருந்து 100 மீற்றர் இடைவெளியில்)
TCN Express
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6
DHL EXPRESS
3 தொடக்கம் 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்
இல. 5, திருநகர் வீதி, கிளிநொச்சியில் இருந்து தற்பொழுது இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது
(திருமுருகன் கொம் நெற் இன் சகல சேவைகளும் புதிய முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது)
வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
MMBL Money Master
46, Adiyapathum Veethy,
Thirunalvely.




# நரியும் கொக்கும்



அது ஒரு அடர்ந்த காடு. அங்கு பல மிருகங்கள் வாழ்ந்து வந்தன. அந்தக் காட்டில் நரி ஒன்று வசித்து வந்தது. அதற்கு எப்போதும் யாரையாவது ஏமாற்றி அவர்கள் ஏமாறுவதைக் கண்டு மனம் மகிழ்வது பொழுது போக்காக இருந்தது.

அதே காட்டில் அறிவு மிக்க கொக்கு ஒன்றும் இருந்ததது. அந்த கொக்கு அனைத்து மிருகங்களிடமும் நன்மதிப்பைப் பெற்றிருந்தது. இதைப் பொறுக்க முடியாத நயவஞ்சக நரி, அந்தக் கொக்கை எப்படியாவது ஏமாற்ற வேண்டும் என்று நினைத்தது.



ஒருநாள் கொக்கு, நரியின் குகை இருக்கும் வழியாக வந்து கொண்டிருந்தது.

நரி அந்த கொக்கைப் பார்த்து நண்பனே! உன்னுடைய அறிவைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். நான் நாளை உனக்கு ஒரு விருந்துவைக்க விரும்புகிறேன். உன்னால் வர முடியுமா என்று கேட்டது.


கொக்கும் சரி வருகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றது.

அடுத்தநாள், நரி சுவைமிக்க சூப் ஒன்றை செய்தது.

அன்று மாலை கொக்கு நரியின் இடத்திற்கு சென்றது.

நரியோ திட்டமிட்டபடி, சூப்பை அகண்ட இரு தட்டில் ஊற்றியது. ஒன்றை கொக்கிடம் கொடுத்தது.


கொக்கினால் வாய் அகண்ட தட்டில் உள்ள சூப்பைக் குடிக்க மிகவும் சிரமப்பட்டது.



நரியோ தன் சூப்பை குடித்துவிட்டு, நண்பனே இந்த சூப்பை உனக்காக செய்தேன் எப்படி இருந்தது? என்று சிரித்துக் கொண்டே கேட்டது.

கொக்கு ஏமாற்றப்பட்டதை உணர்ந்தது. நரியிடம் நண்பனே சூப் மிகவும் ருசியாக இருந்தது என்று கூறியது.

கொக்கு நரியிடம் இரவு நேரம் ஆகப்போகிறது நான் செல்ல வேண்டும் என்று கூறியது.



செல்லும் முன் இன்று நீ எனக்கு விருந்து வைத்தாய்! பதிலுக்கு நான் நாளை உனக்கு விருந்து வைக்கலாம் என்று நினைக்கிறேன். உன்னால் வர முடியுமா என்று கேட்டது.

நரியும் வர சம்மதம் தெரிவித்தது.

நரியோ கொக்கை ஏமாற்றிவிட்டேன் என்ற கர்வத்துடன் சந்தோசமாக உறங்கச் சென்றது.

கொக்கு பசியுடனும் வருத்தத்துடனும் பறந்து சென்றது.

அடுத்த நாள் கொக்கு நரிக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும் என்று நினைத்தது.

மிக சுவைமிக்க சூப் ஒன்றை செய்தது. அதன் வாசனை அந்த காடு முழுவதும் பரவியது.


அன்று மாலை நரி கொக்கின் வீட்டுக்குச்சென்றது. கொக்கு நரி வந்தவுடன் அந்த சுவை மிக்க சூப்பை சிறிய துளை கொண்ட குவளையில் ஊற்றியது. அந்த சூப்பின் வாசனை நரியை ஈர்த்தது. இன்றைக்கு நல்ல வேட்டை என்று நரி நினைத்தது.

கொக்கு சூப் குவளையை நரியிடம் கொடுத்து தன் சூப் குவளையில் அலகை நுழைத்து சூப்பை ருசித்தது. நரியினால் சூப்பைக் குடிக்க முடியவில்லை. கொக்கு நரியைப் பார்த்து சூப் எப்படி இருந்தது என்று கேட்டது. நரியும் மிகவும் அருமை என்றது.

அப்போது தான் நரி ஏமாற்றப் பட்டதை உணர்ந்தது.

நரி, கொக்கிடம் விருந்துக்கு நன்றி என்று கூறிவிட்டுச் சென்றது.

நரி நாம் மற்றவர்களை ஏமாற்றும் போது அவர்கள் எவ்வாறு வருத்தப் படுவார்கள் என்று உணர்ந்தது. அன்றுமுதல் திருந்திய நரி, பிறகு யாரையும் ஏமாற்றுவதில்லை.



# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

11.2013
02

- 1834- முதன் முதலாக இந்தியாவில் இருந்து 75 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மொரீசியஸ் சென்றனர்.
- 1868-நியூசிலாந்து சீர் நேரத்தை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியது.
- 1889-வடக்கு மற்றும் தெற்கு டகோட்டா ஐக்கிய அமெரிக்காவின் 39 -வது, 40-வது மாநிலங்களாக முறையே இணைந்தன.
- 1899-தென்னாபிரிக்காவில் போவர்கள் பிரித்தானியர்கள் வசம் இருந்த லேடிஸ்மித் பகுதியை 188 நாட்கள் பிடித்து வைத்திருந்தனர்.
- 1917-பிரித்தானியாவின் வெளிநாட்டு விவகாரங்களுக்குப் பொறுப்பான செயலாளராக இருந்த ஆதர் பெல்ஃபர் வெளியிட்ட பிரகடனத்தில் யூதர்களுக்கு பாலஸ்தீனத்தில் ஒரு தேசியத் தாய கம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை லண்டன் அரசு ஆதரிக்கிறது எனக் கூறப்பட்டது.
- 1930-ஹைலி செலாசி எதியோப்பியாவின் பேரரசன் ஆனான்.
- 1936-இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி உரோம்-பேர்லின்அச்சு என்ற அச்சு அணியை அறிவித்தான்.
- 1936- பிபிசி நிறுவனம் தொலைக்காட்சி சேவையை ஆரம்பித்தது.
- 1936-கனேடிய ஒலிபரப்பு, கூட்டுத்தபானம் நிறுவப் பட்டது.
- 1953- பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1963- தெற்கு வியட்நாம் ஜனாதிபதி நியோ டின் டியெம் இராணுவப் புரட்சியை அடுத்து கொலை செய்யப்பட்டார்.
- 2000- பன்னாட்டு விண்வெளி நிலையத்துக்கு முதன்முதலாக விண்வெளி வீரர்கள் சென்றடைந்தனர்.

**பிறப்புக்கள்**

- 1795-ஜேம்ஸ் போக், ஐக்கிய அமெரிக்காவின் 11-வது அரசுத் தலைவர் (இ.1849)
- 1815 ஜார்ஜ் பூல், ஆங்கிலேயக் கணிதவியலாளர் (இ.1864)

**இறப்புக்கள்**

- 1903-பரிதிமாற் கலைஞர் வி.கோ.சூரியநாராயண சாஸ்திரிகள், தமிழறிஞர் (பி.1870)
- 1917- ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை, ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் (பி.1858)
- 1950- ஜோர்ஜ் பெர்னாட் ஷா, ஐரிஷ் எழுத்தாளரும், நோபல் பரிசு பெற்றவரும் (பி.1856)
- 1966- பீட்டர் டெபாய், நோபல் பரிசு பெற்றவர் (பி.1899)
- 1978- ஏ.பெரியதம்பிப்பிள்ளை, மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழறிஞர் (பி.1899)

**சிறப்பு நாள்**

ஆன்மாக்களின் கல்லறை தினம்

**புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை**



1899 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி மட்டக்களப்பில் பிறந்தார். இவர் வெண்பா யாப்பினைக் கையாண்டு கவிதை இயற்றுவதில் மிகவும் திறமைமிக்கவராக விளங்கினார். எல்லோருக்கும் இலகுவாக விளங்கக் கூடியவகையில் கவிதை புனைந்தார்.

சுவாமி விபுலானந்தருடன் கொண்டிருந்த தொடர்பைக் காட்டும் *யாழ் நூல் தந்தோன், விபுலானந்த மீட்சில் பத்து* என்னும் கவிதை நூல்கள் அவரது கவித்துவச் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றன. இவரது புலமைச்சிறப்பினைக் கண்டு 1950 ஆம் ஆண்டில் மட்டுநகர் தமிழ்க் கலைமன்றம் *புலவர்மணி* என்னும் விருது வழங்கிக் கௌரவித்தது. *மதுரகவி, சித்தாந்த ஞானபானு* என பல பட்டங்கள் வழங்கப்பட்ட போதிலும் *புலவர்மணி* என்ற பட்டத்தை மாத்திரமே தனது பெயருடன் இணைத்துக்கொண்டார்.

தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்காக இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட 20 அம்சத் திட்டக்குழுவில் இவரது அங்கத்துவம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

# தீபத் திருநாள்



ஆன்மீகம் 25

தீபாவளிப் பண்டிகை, எதிர்மறை சக்திகள் அழிந்து புத்தொளி பிறப்பதன் அடையாளமாகக் கொண்டாடப்படுகிறது.

நம் கலாச்சாரத்தில், வருடத்தில் 365 நாட்களும், ஏதோவொரு காரணத்தோடு பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன.

காரணத்தைவிட கொண்டாட்டமே முக்கியமாகக் கருதப்பட்டது. உண்மையில் எந்த ஒரு காரணமுமே இல்லாமலேயே மனிதன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

நீங்கள் இப்போது உயிரோடு இருக்கிறீர்கள். இதைவிட வேறென்ன கொண்டாட்டம் உங்களுக்குத் தேவைப்படுகிறது? நீங்கள் வாழும் வாழ்க்கையே ஒரு பெரிய கொண்டாட்டமாக நடக்க வேண்டும் தானே? அதற்காகவே உங்கள் வாழ்க்கையில் பல பண்டிகைகள் உருவாக்கப்பட்டன. அவற்றில் பரவலாக அனைவரும் கொண்டாடுவது தீபாவளி.

ஒரு பண்டிகை என்பது வாழ்க்கையை உற்சாகமான மற்றும் குதூகலமான நிலைக்கு மாற்றும் ஒரு கருவியாக இருக்கிறது.

எப்போது நமக்குள் கொண்டாட்டம் இல்லையோ, அப்போது நம் உயிர்த்தன்மையிலும் குதூகலம் இருக்காது.

குதூகலமற்ற மனிதர் ஒரு மருந்தில்லாத பட்டாசு மாதிரிதான்.

தீபாவளி என்பது அந்த ஒரு நாளில் மட்டும் பட்டாசுகளை வெடித்துவிட்டு அடங்கி விடுவது அல்ல. தினமும் இதுபோன்று நமக்குள் நடக்க வேண்டும். நாம் நம்முடைய கண்களை மூடும்போதும் திறக்கும் போதும், நம் உயிர்ச்சக்தி, இதயம், மனம் மற்றும் உடல் ஆகியவை வெடித்துவிடும்படியான உற்சாகத்துடன் இருக்க வேண்டும். நீங்கள் ஒரு ஊசிப் போன பட்டாசு போலவும் புளித்துப்போன தயிர்சாதம் போலவும் மந்தமாக இருந்தால், உங்களுக்கு தினமும் வெளியேயிருந்து யாராவது சாட்டையடி கொடுத்து உங்களை நகர்த்தத் தேவையிருக்கும்.



எனவே, தீபாவளி என்பது அன்று ஒருநாள் மட்டும் வெளியில் விளக்குகளை ஏற்றிவைத்து அமைதியாகி விடுவதல்ல. வருடம் முழுவதும் உள் ஒளியிலும் திளைக்க என்ன தேவையோ, அதைச் செய்யவேண்டும் என்பதற்கான நினைவூட்டலே இந்த தீபாவளித் திருநாள்.

உங்களுக்குள் சேகரித்திருக்கும் இருள் மேகங்களை அகற்றினாலே அங்கு தானாக உள் ஒளி ஏற்படும். இதற்கான உங்கள் முயற்சிக்கு எப்போதும் நாம் துணையாக இருப்போம்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# ஒன்றிணைகிறார்களா புலம்பெயர் தமிழர்கள்?

2000 ஆம் ஆண்டளவில் தமிழீழ விடுதலைப்புலிகள் தமக்குத் தேவையான நிதியைப் பெருமளவில் சேகரிக்கத் திட்டமிட்டனர். இதன் விளைவாக, தமது ஆதரவு அமைப்புகளின் ஊடாக புலம்பெயர் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த செல்வந்தர்களிடம் தமக்கான நிதியைத் திரட்ட ஆரம்பித்தனர். இவ்வாறான நிதி திரட்டால் பணியில் மிகவும் முக்கிய

**இவ்வாறு இன்ர பிறஷ் சேர்விஸ் ஊடகத்தில் சமூவெல் ஒக்ஃபோட் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஒருவராக ராஜ் ராஜரட்ணம் காணப்பட்டார். இவர் உலகில் வாழும் இலங்கையர்களில் மிகப்பெரிய செல்வந்தராகக் காணப்பட்டார். அவர் நியூயோர்க் நிதி சேகரிப்பு நிறுவனமான கேர்லியன் குறூப் இனி நிறுவுநராவார்.

2009 இல் இவர் கைது செய்யப்படுவதற்கு முன்னர், விடுதலைப் புலிகளுடன் தொடர்பட்டது என்ற குற்றச்சாட்டின் பேரில் சொத்துக்கள் அனைத்தும் முடக்கப்பட்ட தொண்டர் அமைப்பான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு ராஜ்ராஜரட்ணம் 3.5 மில்லியன் டொலர்கள் வரை வழங்கியிருந்தார். இலங்கைக்கு வெளியே வாழ்ந்த தமிழ் சமூகமானது உள்நாட்டுப் போருக்கு நிதி வழங்குவதில் ஆர்வங்காட்டிய அதேவேளையில் உள்நாட்டில் வாழ்ந்த தமிழ் மக்களின் உடல் ரீதியான போரின் வடுக்களைத் தாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் அமைப்பானது தனது இராணுவ மூலோபாயத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்கு சில தவறான காரியங்களில் ஈடுபட்டது. அதாவது சிறுவர்களைத் தமது படையில் இணைத்தமை, தற்கொலைக் குண்டுத்தாக்குதல் உத்தியைப் பயன்படுத்தியமை போன்றன இங்கு குறிப்பிடக் கூடியவையாகும்.

இலங்கையை விட்டு வேறு நாடுகளில் குடியேறுவதன் மூலம் தமது பொருளாதாரத்தைப் பலப்படுத்திக் கொள்ள முடியும், சிறந்த கல்வி வாய்ப்பைப் பெற்று, சிறப்பான வாழ்வை வாழ முடியும் என இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் சிலர் கூறுகின்றர் என் வெய்ஸ் தெரிவித்தார்.

புலம்பெயர் சமூகம் என்கின்ற பதமானது தவறானது. புலம்பெயர்ந்து வாழும் பெரும்பாலான தமிழர்கள் பொருளாதாரத்தை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டே நாட்டை விட்டுச்சென்றுள்ளனர் என அமெரிக்க மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களால் போர்க்குற்றவாளி எனக் குற்றம் சுமத்தப்பட்ட, ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி பாலித ஹோகன் விபரிக்கிறார்.

காலமும் இடைவெளியும் புலம்பெயர் தமிழ் சமூகத்தை மேலும் தீவிரமான திசை நோக்கிப் பயணிப்பதற்கு வழிவகுத்துள்ளது. இலங்கைக்குள் வாழும் பெரும்பாலான தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களை விட குறைவான தேசியவாதிகாளக் காணப்படுகின்றனர். உலகெங்கும் வாழும் தமிழ் சமூகமானது எப்போதும் உள்நாட்டில் வாழும் த்மிழ் சமூகத்தைவிட தமது கோரிக்கைகளை மிகவும் தீவிரமாக முன்வைக்கின்றனர். என அனைத்துலக நெருக்கடி அமைப்பின் இலங்கையைச் சேர்ந்த ஆய்வாளர் அலன் கீனன் தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் 11 தாக்குதலை அடுத்து, அனைத்துலக சமூகமானது பயங்காரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை முன்னெடுக்கத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து மேற்குலக அரசாங்கங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதி சேகரிப்பு வலைப்பின்னலை அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கின. அமெரிக்க அதிகாரிகள், விடுதலைப்புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பு என முத்திரை குத்தினர். இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆதரவுக் குழுக்களின் சொத்துக்கள் அமெரிக்காவால் கையகப்படுத்தப்பட்டன. விடுதலைகளின் நிதிப்பலம் குறைவடையத் தொடங்கியமையே இவர்கள் இராணுவ ரீதியில் தோல்வியுறக் காரணமாகியது.

இலங்கையில் தொடரப்பட்ட இறுதிக்கட்ட யுத்தத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் படைகளால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு யுத்த மீறல்கள் தொடர்பில் பொறுப்பளிக்க வேண்டும் எனக் கோருவதுடன் இலங்கை அரசாங்கம் மீது அழுத்தம் கொடுப்பதே தற்போது புலம்பெயர் தமிழ் சமூகத்தின் முக்கிய திட்டமாகக் காணப்படுகிறது.

தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு இராணுவத் தீர்வென்பது சாத்தியமற்றதாக இருக்கலாம் என்பதை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஏற்றுக் கொள்கின்ற போதிலும் இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் நிலையான அமைதியை எட்டி தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு தனித் தாய்நாடு மட்டுமே ஏற்புடையதாகும் என்பதில் உறுதியாக உள்ளது.



இலங்கையில் நவம்பரில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் அரசாங்கத் தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளாது அதனை தான் புறக்கணிக்கவுள்ளதாகக் கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் கார்ப்பர் அறிவித்துள்ளதன் மூலம் கனேடியத் தமிழர் அமைப்பானது குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளது.

செப்ரெம்பர் 21 அன்று வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அமோக வெற்றியீட்டியது. வடக்கு மாகாணத்தை தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அரசாங்கம் நிர்வகிப்பதானது எமது மக்களின் கௌரவம் மற்றும் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துவதற்கு வழி கோலுகிறது என கனேடியத் தமிழர் அமைப்பு தெரிவித்திருந்தது.

(முற்றும்)

# நாட்டில் அதிக அழிவை ஏற்படுத்தியது ஆட்சியாளர்களே!-அமைச்சர் டளஸ்


(கொழும்பு)

**நாட்டின் வரலாற்றில் நாட்டை ஆட்சி செய்த தலைவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு பிரிவினைவாத நோக்கில் செய்த அழிவுகளை விட அதிகமான அழிவுகளை செய்துள்ளதாக அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில் எந்த அரசாங்கம் ஆட்சி செய்தாலும், தொழிற்கல்வி தொடர்பாக உரிய கவனம் செலுத் தப்படுவதில்லை. அந்த கல்வி முறை தொடர்பில் அறியாமை அல்லது போதிய அளவில் புரிதல் இன்மை அல்லது தெரிந்து கொள்வ தற்கான ஆர்வம் இன்மை போன்ற விடயங்களை சுட்டிக்காட்டலாம்.

தொழிற்கல்வி பற்றி சிந்திக்காமல், பல்கலைக்கழகம் சென்று வர வேண்டும் என்ற நோக்கம் மாத் திரமே இன்றைய இளைஞர்கள் மத்தியில் இருப்பதாகவும் அமைச் சர் சுட்டிக்காட்டினார்.



நாட்டில் கல்வித்துறையில் முன் னேற்றங்களை செய்யாததன் மூலம் நாட்டை ஆட்சி செய்த தலை வர்கள் நாட்டுக்கு அழிவை ஏற்ப டுத்தியுள்ளனர்.

எமது நாடு பின்னடைவான நிலைமையில் இருப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். சோமாலியா, எதியோப்பியா, சூடான் ஆகிய நாடுகளுடன் ஒப்பிடும் போது ஒவ்வொன்றும் வேறுபட்டது. இத னால் எமது நாட்டின் பின்ன டைவை வாத பிரதிவாதங்கள் ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாது.

சுகாதாரம் போன்ற பொது வச திகளை எடுத்து கொண்டால் இலங்கை உயர்ந்த நிலையில் உள்ளது. இந்த விடயங்களில் எதியோப்பியா, சோமாலியா போன்ற நாடுகள் மிகவும் கீழ் நிலையில் உள்ளன.

எமது நாட்டில் தொழில் கல்வி யில் முன்னேற்றங்கள் ஏற்படுத்தப் படவில்லை.

கடந்த 1893 ஆம் ஆண்டு தொழில் பயிற்சி கல்லூரி ஆரம்பிக் கப்பட்டதுடன் அதன் பின்னர் 100 வருடங்கள் கடந்த நிலையிலேயே அதனை சீர்செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின் றன என்றார். (அ-2)

# 2 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள் சிக்கியது

(கொழும்பு)

மாலபேயில் கைப்பற்றப்பட்ட 2ஆயிரம் ரூபா போலி நாணயத் தாளில் காணப்பட்ட இலக்கத்தைக் கொண்ட மற்றுமொரு 2ஆயிரம் ரூபா போலி நோட்டு கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

கடை உரிமையாளர் ஒருவர் யக்கலமுல்ல பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

யக்கலமுல்ல, நாகியாதெனிய பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அந்த போலி நோட்டு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அது மாலபே பிரதேசத் தில் அதிரடியாக கைப்பற்றப்பட்ட பெருந்தொகை 2ஆயிரம் ரூபா நாணயத்தாளில் காணப்பட்ட பி 67799159 என்ற அதே இலக் கங்களைக் கொண்டவை என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.

போலி நாணயத்தாள்கள் தொடர் பில் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறும் அவ்வாறான போலி நோட்டுக்கள் தொடர்பில் தகவல் கிடைப்பவர்கள் உடனடியாக அருகி லுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறி விக்குமாறும் பொலிஸ் திணைக் களம் கோரிக்கை விடுத்துள் ளது. (அ-2)

# அதிவேக நெடுஞ்சாலையிலும் கட்டாக்காலி நாய்களாம்

(கொழும்பு)

கொழும்பு - கட்டுநாயக்க அதி வேக நெடுஞ்சாலையில் கட்டாக் காலி நாய்களினால் தொல்லை ஏற்பட்டுள்ளது.

கட்டாக்காலி நாய்களின் சஞ்சரிப் பினால் இதுவரையில இரண்டு வாகன விபத்துக்கள் இடம் பெற் றுள்ளன.

இந்தப் பிரச்சினைக்கு விரை வில் தீர்வு காணப்படும் என அதி வேக நெடுஞ்சாலையின் நிர்வாக உயரதிகாரி பீ.கே. ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் நூற்றுக்கும் மேற்பட்ட நாய்கள் வலைகளின் மூலம் பிடிக்கப்பட்டிருந்தன.

இதேவேளை, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நடந்து சென்ற நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

காரில் சென்ற நபர் காரிலிருந்து இறங்கி பாதையில் நடந்து சென்ற தாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)




சாவகச்சேரி பிரதேசசபை கச்சாய் பொது நூலகத்தால் வாசிப்பு மாத நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிகழ்வில் பாடசாலை மாணவருக்கான ஆங்கில வாசிப்புப் போட்டி நடத்தப்பட்டது. இதில் பங்குபற்றிய மாண வர்களில் ஒரு பகுதியினரையும் நடுவர்களாக பங்குபற்றிய ஆசிரியர், பிரதேசசபை உத்தியோகத்தர் , நூலகர் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

## திறப்புக் கோர்வை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

திறப்புக் கோர்வையொன்று நவாலி வீதியில் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப் படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (அ)

# கட்சியின் சிரேஷ்ட தலைவர் பதவியை ஏற்கமாட்டேன்

## ரணில் விக்ரமசிங்க விடாப்பிடி

(கொழும்பு)

ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தொடர்ந்தும் கட்சித் தலைவராக தக்கவைப் பதற்கான யோசனையொன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ள ஐ. தே. க. செயற்குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேசிய பிக்கு முன்னணியுட னும், கட்சி முக்கியஸ்தர்களுட னும் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை களில் எட்டப்பட்ட இணக்கப்பாட் டுக்கு மாற்றமாக ரணில் விக்கிர மசிங்கவை தொடர்ந்து பதவியில் வைத்திருக்க முயற்சி நடப்பதாக தேசிய ஊழியர் சங்க உப அமைப் பாளர் ஆனந்த பாலித கூறியுள் ளார்.

ஐ. தே. க. சகல தேர்தல்களிலும் தொடர்ச்சியாக தோல்வியடைந்து வரும் நிலையில் தலைமைத்துவத் தில் இருந்து ரணில் விக்கிரமசிங்க விலக வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றுள்ளது.

இதன் காரணமாக கட்சியினுள் ஏற்பட்டுள்ள விரிசலைத் தடுக்க தேசிய பிக்கு முன்னணி தலையிட் டுள்ளதோடு இதற்காக தலைமைத் துவ சபையொன்றும் அமைக்கப் பட்டது.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கி ரமசிங்கவை கட்சியின் சிரேஷ்ட தலைவராக நியமிக்க பிரேரிக்கப் பட்டுள்ளது. சஜித் பிரேமதாஸ, கரு ஜயசூரிய ஆகியோருக்கு கட்சியில் முக்கிய பொறுப்பு வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைமைத்துவத்திலி ருந்து விலகக் கூடாது என்று தெரிவிக்கும் யோசனையொன்று திங்கட்கிழமை நடைபெறும் செயற்குழுக் கூட்டத்தில் முன்வைக் கப்பட இருப்பதாக ஆனந்த பாலித தெரிவித்தார்.

இதேவேளை சிரேஷ்ட தலைவர் பதவியை ஏற்றுக் கொள்ளப் போவ தில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ர மசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய பிக்குகள் முன்னணியி னால் கட்சியின் மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு எட்டு அம்ச யோசனைத் திட்டமொன்று முன் வைக்கப்பட்டுள்ளது. இந்த யோச னைத் திட்டத்தில் கட்சித் தலைமைப் பதவியை புதிய ஒருவரிடம் ஒப் படைத்து கட்சியின் சிரேஷ்ட தலை வர் பதவியை ரணில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென வலியுறுத் தப்பட்டுள்ளது. எனினும் இந்த யோசனைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என அவா அறிவித்துள்ளார். (அ-2)

# இலங்கையின் மனிதவுரிமை குறித்து பங்களாதேஷ் கலந்துரையாடும்

(கொழும்பு)

கொழும்பில் எதிர்வரும் 15 ஆம திகதி முதல் 17ஆம் திகதி வரை நடைபெறும் பொதுநலவாய நாடுக ளின் தலைவர்கள் கலந்து கொள் ளும் உச்சிமாநாட்டில் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள் ளது.

குறித்த மாநாட்டில் கலந்து கொள்ள பிரதமர் ஷேக் ஹசீனா ஆர்வம் கொண்டுள்ளதாகவும் அவர் பல தடவைகள் இந்த மாநா ட்டில் கலந்து கொண்டிருப்பதாக வும் பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

காலநிலை மாற்றம், பிராந்திய பிரச்சினைகள், சுகாதாரம், மனித இயக்கம் ஆகியவற்றுக்கு முன்னு ரிமை வழங்க பங்களாதேஷ் பொது நலவாய அமைப்பின் கூட்டத்தில் அழுத்தங்களை கொடுக்கும் என பங்களாதேஷ் வெளிவிவகார செயலாளர் தெரிவித்துள்ளார்

அத்துடன் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் சரிசமான அபிவிருத்தி தொடர்பில் பங்களாதேஷ் ஆதரவை வழங்கும் என்றார்.

இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் சர்வதேச மற்றும் பொதுநலவாய நாடுகளின் விவகாரங்கள், கொள்கைகள் மற்றும் கூட்டு உடன்பாடுகள் தொடர்பில் விவாதிக்கப்படும்.

இம் மாநாட்டில் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள், மாலைதீவின் தேர்தல் பிரச்சினை கள் ஆகியன குறித்து முக்கியமாக கலந்துரையாடப்படவுள்ளது.

பங்களாதேஷ் பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்களின் செயற் பாட்டுக் குழுவில் அங்கம் வகிக் கின்றது. இதனால் இந்தப் பிரச்சினை கள் தொடர்பில் அந்த நாடு முக்கிய பங்கை கொண்டுள்ளது. (அ-2)

# மலர்கள் மற்றும் வர்ண தாவரங்களின் உற்பத்தியும் வீட்டுத் தோட்டமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 36-I

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

மலர்கள் மற்றும் அழகு தாவரங்களின் உற்பத்தி (Floriculture) பற்றிய தேசிய ரீதியிலான மாநாடொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கொழும்பிலுள்ள விஞ்ஞான அடிப்படைக்கற்கைகள் நிறுவனத்தில் ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி நடைபெற்றது.

இதில் இலங்கையிலுள்ள மலர்கள் மற்றும் அழகுத்தாவரங்களை உற்பத்தி செய்யும் தனியார் நிறுவனங்கள் பெருமளவில் கலந்து கொண்டு தமது நிறுவனத்தில் உற்பத்தி செய்யும் மலர்த்தாவரங்கள் மற்றும் அழகு தாவரங்களை காட்சிக்காக வைத்திருந்தனர். மலர்கள் மற்றும் அழகுத்தாவரங்களின் உற்பத்தி பற்றிய சிகிச்சைப் பிரிவொன்றும் (Plant clinic) அங்கே வைக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் முதற்பெண் மணி ஷிராந்தி விக்கிரமசிங்க ராஜபக்ஷ பிரதம விருந்தினராகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவி பேராசிரியர் ஹானிக்கா கிரிம்புரேகம மற்றும் தாவரயியல் பூங்காக்களுக்கான அமைச்சின் செயலாளர், கண்டி ரோயல் தாவரவியல் பூங்காவின் பணிப்பாளர் என பலரும் விசேட அதிதிகளாக கலந்து கொணடு சிறப்பித்தனர். பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்னவின் தலைமையில் இம்மாநாடு நடை பெற்றது சிறப்புக்குரியது.

இலங்கையில் மலர்கள் மற்றும் அழகுத் தாவரங்களை உற்பத்தி செய்பவர்கள் அவற்றை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர். இதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கு அதிக வருவாய் ஆரம்ப காலங்களில் இருந்து வந்தது. ஆனால், தற்போதுள்ள நடைமுறையில் இத்தொழிலில் ஈடுபடுபவர்களால் அதிக வருவாயை ஈட்ட முடியாதிருப்பதுடன் இதன் மூலம் கிடைக்கும் அந்நிய செலாவணியும் கணிசமான அளவுக்கு குறைந்து விட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்து இவ்வுற்பத்தியாளர்களுடைய பிரச்சினைகளை இனங்கண்டு இத்தொழிலை புதிய உத்வேகத்துடன் முன்னெடுப்பதற்காக இம்மாநாடு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் மலர்கள் மற்றும் வர்ண இலைகளை பல்வேறு வைபவங்களுக்காக வெளிநாடுகளிலிருந்து கொள் வனவு செய்கின்றனர். எமது நாட்டிலிருந்தும் இந்நாடுகளுக்கு மலர்கள் மற்றும் அழகுக் காக வைக்கப்படும் இலைகள் என்பன ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தற்போதுள்ள சூழ்நிலையில் இவ்வாறு ஏற்றுமதி செய்வதை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை நாம் இனங்கண்டு இத் தொழிற்றுறை மேலும் விரிவடைவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதில் முக்கிய பங்காளியான ஹேலீஸ் விவசாயம் (Heley's Agriculture) முனைப்புடன் தமது உற்பத்திப் பொருட்களையும் தொழில்நுட்ப விளக்கத்தையும் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கு குறிப்பிடத்தக்க விடயம் எதுவெனில், வடபகுதியில் பெண்களைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் மகளிருக்கான வேலைவாய்ப்பை உருவாக்கவும் இவ்வகையான தொழிற்றுறையை வடபகுதியில் மேம்படுத்தவும் இம்மாநாட்டில் கலந்துரையாடப்பட்டது.



வடபகுதியில் பெண்களினால் முன்னெடுக்கக்கூடிய தொழிற்றுறைகளுள் மலர்கள் மற்றும் அழகுத்தாவரங்களின் உற்பத்தியும் இனங்காணப்பட்டுள்ளது. பெண்களால் அவரவர் வீட்டிலிருந்தவாறே பணம் சம்பாதிக்கக்கூடிய தொழிற்றுறையிது. மகளிர் அமைப்புக்கள், சங்கங்கள் இவ்விடயத்தில் கரிசனை செலுத்துவது நல்லது. மகளிர் பலர் இணைந்து இவ்வாறான தொழிற்றுறையை ஆரம்பிக்கலாம்.

பல்வேறு வைபவங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் இயற்கையான மலர்களையும் தாவர இலைகளையும் பயன்படுத்துவதை ஊக்குவித்தால் நம்மூரிலும் இவற்றினது பயன்பாட்டை அதிகரிக்கலாம். வடமாகாண விவசாய அமைச்சரின் கனவிலும் நடவடிக்கையிலும் இயற்கையினை மேம்படுத்தும் இச்செயற்பாட்டிற்கும் தொழிற்றுறைக்கும் நிச்சயமாக வரவேற்பிருக்கும்.

பிளாஸ்ரிக் கிலான பூக்களை வடபகுதிப் பெண்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு இயற்கையான பூக்களையும் வண்ண இலைகளையும் உற்பத்தி செய்யும் தொழிற்றுறை கைகொடுக்கும். மேலும் செயற்கையான பூக்களை குறிப்பாக பிளாஸ்ரிக்கிலான பூக்களை பயன்படுத்துவதனை நாம் எல்லோரும் தவிர்க்க வேண்டும். நிறுவனங்களிலும் வைபவங்களிலும் இயற்கையான பூக்களை பயன்படுத்துவதை விருப்பாக நாம் நடைமுறைப்படுத்தினால் இம் மாதிரியான தொழிற்றுறைக்கு ஆக்க பூர்வமான பங்களிப்பாக இருக்கும்.

வடபகுதி அபிவிருத்திக்கு நாமும் என்ன செய்யப்போகின்றோம் என்பதனை ஒரு கணம் சிந்திப்போமானால் எம்மாலும் இவ்வாறான தொழிற்றுறையை வளர்த்தெடுக்க முடியும். வடபுலத்திலிருந்து மலர்களும் வண்ண இலைகளும் தாவரங்களும் வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகும் காலம் கனிந்து வரும்போது எமது மக்களுடைய தொழிற்றுறை இன்னும் மேன்மையுறும். தற்போது பலர் இவ்வாறான நாற்று மேடைகள் கொண்ட பூங்காக்களை நெடுஞ்சாலையோரமாக அங்குமிங்குமாக உருவாக்குவதனை நாம் அவதானிக்கலாம். இவ்வாறான தொழிற்றுறைக்கு கைகொடுத்து அவர்களது அழகு தாவரங்களை மக்கள் வாங்குவதை ஊக்குவிப்பதும் இந்த தொழிலுக்கான முன்னேற்றமான விடயமாகும்.

இயற்கையை அனுசரித்து, இயற்கையை மேம்படுத்தி இயற்கையுடன் வாழும் வாழ்க் கைக்குள் நாம் எம்மைப் பழக்கிக்கொள்ள வேண்டும். இத்தாவர சங்கமத்துள்... என மணிவாசகப்பெருமான் விளித்ததை நாம் எமது தாரகமந்திரமாகக் கொண்டு இயற் கையை முன்னிலைப்படுத்தும் இவ்வாறான கைத்தொழிற்றுறையை முன்னேற்றுவதற்கான ஆக்கபூர்வமான வழிகளை நாம் விரைந்து கண்டு அதனை நடைமுறைப்படுத்தவும் வேண்டும்.

வீட்டுத்தோட்டங்களில் பூக்கும் தாவரங்களை வளர்க்க ஊக்குவிப்பது சூழலை பாதுகாப்பதற்கான வாய்ப்பாகும். வீட்டுத் தோட்டங்களில் அழகுத்தாவரங்களையும் சேர்த்து வளர்க்கலாம்.

இத்தொழிற்றுறையை வீட்டுத்தோட்டங்களில் சிறிதாக ஆரம்பித்து பின்னர் அதனது தேவையைப் பொறுத்து விசாலமாக்கலாம். இத்தாவரங்களை தென்பகுதியிலிருந்து பலர் எடுத்து வந்து விற்பனை செய்கின்ற நிலையில் எமது பிரதேசத்திலுள் தாவரங்களை பாதுகாக்கவும் அவற்றின் பயன்பாட்டைப் பெறவும் நாம் வீட்டுத்தோட்டங்களில் இவற்றை வளர்க்க ஆரம்பித்து பின்னர் கேள்வி அதிகமாகவுள்ள தாவரங்களை பெருக்கிக்கொள்ளலாம். வீட்டுத்தோட்டங்களை பூக்கள் நிறைந்த தாவரங்கள் கொண்டதாக மாற்றும்போது அவற்றை நோக்கி மகரந்த சேர்க்கையிலீடுபடும் பூச்சியினங்கள் மற்றும் தேனீக்கள் என்பன வருகைதரும். இதன் மூலம் நன்மைதரும் பூச்சியினங்களை பாதுகாக்கவும் விருத்தி செய்யவும் வாய்ப்பேற்படும். எமது உயிர்ப் பல்வகைமையை பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பாகும். வாருங்கள் நாம் முதலில் இணைந்து நல்லதொரு தேசத்தை கட்டியெழுப்ப முனைவோம்.

# சிங்கள பெண்களுக்கு கருக்கலைப்பு; கொதிக்கிறது பொதுபல சேனா

(கொழும்பு)

சிங்கள பௌத்த இனத்தை குறைக்கும் நோக்கில் சிங்களப் பெண்களுக்கு கருக் கலைப்பு செய்யப்படுவது அதிகரித்து வருவதாக பொதுபல சேனா குற்றம் சாட்டியுள்ளது.

அதன்படி 8 இலட்சத்து 90 ஆயிரம் சிங்களப் பெண்கள் நாடு முழுவதும் அமைந்துள்ள கருக்கலைப்பு மையங்களில் கருக் கலைப்பு செய்துள்ளதாக பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொதுபல சேனா அமைப்புக்கும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால ஸ்ரீ சேனாவுக்கு மிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே தேரர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கள பௌத்த மக்களின் இனப் பெருக்க வேகத்தை குறைக்கும் நோக்கில் சிலவைத்தியசாலைகளை தளமாகக் கொண்டு இந்த கருக்கலைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை புள்ளிவிபரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

சில கிராமங்களில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த இளம் வயது பெண்கள் அச்சுறுத் தப்பட்டு கருக்கலைப்புக்கு இணங்க வைக்கப் படுகின்றனர். இந்த நாடு ஒரு காலத்தில் சிங் கள இனம் இல்லாமற் போகும் நேரத்தில் பௌத்தம் முற்றாக இல்லா தொழிக்கப்படும்.

இதனால் இது சம்பந்தமாக சுகாதார அமைச்சர் முக்கிய கவனம் செலுத்தி சட்ட விரோத கருக்கலைப்பு மையங்களை உடனடியாக தடைசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (அ-2)

# சந்தேக நபர்கள் தொடர்ந்தும் துன்புறுத்தப்படுகின்றனர்

## மனித உரிமை கண்காணிப்பகம்

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்தும் சந்தேக நபர்கள் துன்புறுத்தப்பட்டு வருவதாக மனித உரிமை கண்காணிப்பகம் அறிவித்துள்ளது.

காணாமற் போதல்கள் தொடர்பில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சம்பவங்கள் குறித்த விசாரணைகள் நிலுவையில் இருப்பதாக குற்றம் சுமத்தியுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருப்பதாகவும் இதனால் சந்தேக நபர் ஒருவரை குற்றச்சாட்டுக்கள் இன்றி 18 மாதங்கள் வரையில் தடுத்து வைக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள் துன்புறுத்தப்படுவதாகவும் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் இதுவரையில் இடம்பெற்ற சந்தேக நபர்கள் மீதான சித்திரவதைகள் குறித்த பத்து சம்பவங்கள் பற்றிய தகவல்களை மனித உரிமை கண்காணிப்பகம் வெளியிட்டுள்ளது.

தொடர்ந்தும் அடக்குமுறைகள் மேற்கொளப்பட்டு வருவதாக மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதாக தெரிவித்துள்ளார். (அ-2)

# இந்தியா, பிரித்தானியாவின் இராஜதந்திரம் நெருக்கடியில்!


பொதுநலவாய நாடுகளின் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் தென்னிலங்கையில் தீவிரமடைந்திருப்பதாக சொல்லப்படுகிறது. இதன்படி கொழும்புக்கு வரும் பயணிகள் விமானங்களை மாத்தல சர்வதேச விமான நிலையத்திற்கு திசை திருப்பி விடலாமா என்கிற யோசனைகூட முன்வைக்கப்பட்டதாம்.

253 பில்லியன் ரூபாயை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு ஒதுக்க முயல்வது சரியென்று நியாயப்படுத்தும் வகையில் நகரின் பாதுகாப்பு விரிவுபடுத்தப்படுகிறது.

இன்றைய நிலவரப்படி நவம்பர் 17,18 களில் நடைபெறவுள்ள இம்மாநாட்டினால் பெரும் இராஜதந்திர சிக்கலில் மாட்டுப்பட்டுள்ள நாடுகள் பிரித்தானியாவும் இந்தியாவுமே. எப்படியும் இம்மாநாடு இலங்கையில் நடக்கும் என்கிற உறுதிமொழியை பொதுநலவாய கூட்டத்தொடரின் செயலாளர் கமலேஷ் சர்மா வழங்கியதால் பெருமகிழ்வுடன் இருக்கிறது இலங்கை அரசாங்கம்.

இலங்கை அரசைப் பொறுத்தவரை அதற்கு இரண்டு கண்டங்களைத் தாண்ட வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. ஒன்று பொதுநலவாய நாடுகளின் மாநாடு. அடுத்தது மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடர்.

முதலாவது, சர்வதேச அங்கீ-



காரத்தை வலுப்படுத்தும் சாதகமான இடமாக இருக்கிறது. இரண்டாவது, சர்வதேச அங்கீகாரத்தை சிதைக்கும் ஒரு மோசமான களமாக மாறக்கூடிய ஏதுநிலையைக் கொண்டிருக்கிறது.

இதில் சர்வதேச அங்கீகாரம் என்பது, 2009 இற்குப் பின்னர் அரசின் மீது கடுமையாக முன்வைக்கப்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டினை முறியடிக்க உதவி புரியுமென்று ஆட்சியாளர் நம்புகின்றார்கள்.

அதாவது, பொதுநலவாய நாடுகளின் கூட்டமைப்பில் அடுத்த இரண்டு வருடங்களுக்கு கிடைக்கும் தலைமைப் பொறுப்பானது, மார்ச் மாத மனித உரிமைப் பேரவை கூட்டத்தொடரினை பலவீனப்படுத்தும் என்கிற நம்பிக்கையோடு போரினவாதசக்திகள் இருப்பதுபோல் தெரிகிறது.

6 மாதங்களுக்குப் முன்பே, மாநாட்டில் கலந்துகொள்வோம் என்று பிரித்தானியப்பிரதமர் வாக்குறுதியளித்தவுடன் இலங்கை அரசாங்கம் புதுத்தெம்புடன் தனது மாநாட்டில் வேலைகளை ஆரம்பித்துவிட்டது. அடிக்கடி வரும் குர்ஷித்தும், தனது வரவு நிச்சயிக்கப்பட்ட ஒன்று என்று ஊடக ங்களுக்கு வழங்கிய செய்தியும் அரசை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியிருக்கும்.

ஆனால், 52 நாடுகள் கூடும் இம்மாநாட்டினை பகிஸ்கரிக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி விடுத்த அறிவித்தல், அரசுக்கு புதிய நெருக்கடிகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதுமட்டுமல்லாது, இந்த வாரம் தமிழக சட்டசபையில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களால் முன்வைக்கப்பட்டு, அனைத்துக் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்ட பகிஷ்கரிப்புத் தீர்மானத்தாலும் இலங்கை தரப்பு சற்று ஆடிப்போயுள்ளது.

அடுத்த வருட முற்பகுதியில் லோக்சபா தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தமிழகத்தை எதிர்த்து மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்வாரா என்கிற சந்தேகம் பல மட்டங்களில் எழுந்துள்ளது. இந்தச் சந்தேகம் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அவர்களுக்கும் உண்டு.

இலங்கை ஆட்சியாளர்களைவிட பெரும் இக்கட்டான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருப்பது இந்தியாவின் வெளியுறவு அமைச்சு என்பதுதான் நிஜம்.

தமிழ் நாட்டின் அழுத்தத்தினால்தான் இந்தியப் பிரதமர் மாநாட்டிற்கு வரவில்லை என்கிற நியாயத்தை இலங்கையின் அரச உயர் குழாம் ஏற்றுக்கொள்ளும். ஆனால், இதை வைத்து தென்னிலங்கையிலுள்ள பேரினவாத சக்திகளான இராவண பலய, ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்றவை இந்தியாவுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்த ஆரம்பித்துவிடும்.

இத்தகைய எதிர்ப்பலைகள், சீனாவுக்கு சார்பான புதிய பேரினவாத கூட்டுமன உணர்வினை உருவாக்கிவிடும் என்பதுதான் இந்திய கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் டில்லி, சென்னை மூலோபாய கற்கைநெறிக்கான நிறுவனங்களின் ஆஸ்தான ஆய்வாளர்களில் கவலை.



கேணல்.ஹரிஹரன், பேராசிரியர் சூரிய நாராயணன் போன்ற அரசறிவியலாளர்கள் மத்தியிலும் நீண்டகாலமாகவே இந்தச் சந்தேகம் இருந்து வருகிறது. ஏனெனில் அவர்கள் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு, பிராந்திய நலன் என்பதன் அடிப்படையிலேயே இலங்கை விவகாரத்தைப் பார்ப்பார்கள்.

மனித உரிமையினை மேம்படுத்தச் சொல்லி ஐ.நா. சபையில் தீர்மானம் கொண்டு வரலாம். அதற்கு ஆதரவும் அளிக்கலாம். ஆனால், அதையே ஒரு காரணியாக வைத்து இலங்கையைப் புறக்கணித்தல் என்பது ஆபத்தான விளைவுகளை உருவாக் கும் என்று இந்தியா கணிப்பிடுகிறது.

இலங்கையில் சீனாவின் முதலீடுகள், தனது எதிர்கால பிராந்திய பாதுகாப்பிற்கு சவாலாக இருக்குமென இந்தியா எண்ணுவதில், நியாயம் இருப்பதாகவே ஹரிகரன் அண்மையில் குறிப்பிட்டிருந்தார். இங்கு மற்றொரு விதமான பார்வை பற்றியும் குறிப்பிடல் வேண்டும்.

அதாவது இந்தியாவின் சீனப் பூச்சாண்டியானது பூசி மெழுகப்பட்ட கற்பிதம் என்பதாக, புதிய பார்வை ஒன்றினைப் புகுத்துவோர், சீனாவும், இந்தியாவும் தமக்கிடையே பொருளாதார உறவினை மேம்படுத்தும் சங்கதிகளை உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென்கிறார்கள். ஆனால், இதற்கு எதிர்வாதமாக தென்சீனக் கடல் விவகாரத்தைக் குறிப்பிடலாம்.

அதாவது, அமெரிக்கக் கடன் பத்திரங்களை ட்ரில்லியன் டொலர் கணக்கில் சீனா வாங்கினாலும் பிரித்தானிய அணு உலைகளில் முதலீடு செய்ய முன்வரினும் தென் மற்றும் கிழக்கு சீனக்கடலில் மேற்குலகம் கூட்டுச் சேர்வது ஜப்பான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளோடுதான்.

ஆகவே, இலங்கையில் சினாவின் பொருண்மிய வகிபாகம் கற்பிதமல்ல. எச்சிம் வங்கியிலிருந்து நடந்த பணப்பரிவர்த்தனை கற்பனையல்ல. அம்பாந்தோட்டை துறைமுகம் ஒரு கனவுலகமல்ல.

வன்னிப் போருக்கு சீனா வழங்கிய எறிகணைகளும் போர் விமானங்களும் உண்மையென்பதை ஐ.நா. சபையின் நிபுணர் குழு அறிக்கை உரத்துச்சொல்கிறது. ஆகவே, வல்லரசுக்களின் பிராந்திய நலன் பேணும் போட்டியில் ஈழத் தமிழினம் அகப்பட்டிருக்கிறது என்பதுதான் அப்பட்டமான உண்மை.

இலங்கையுடன் இராஜதந்திர உறவினை பலப்படுத்த வேண்டும் என்று, இந்திய நடுவண் அரசின் வெளியுறவுக் கொள்கை சொல்லும்.

ஒடுக்கப்படும் எமது இனத்திற்கு ஆதரவாக செயற்பட வேண்டுமென தமிழக அரசு கூறும்.

இந்த முரண் நிலையை எவ்வாறு கையாள்வது என்பதுதான் இந்திய அரசின் பெருங்கவலை.

பொது நலவாய நாடுகளின் மாநாடு முடிந் தாலும் இந்த முரண் நிலை இன்னும் வேகமாக நகரும்.

இதயச்சந்திரன்

# இந்தியாவின் பங்கேற்புத்தான் தமிழர்களுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும்-இளங்கோவன்



(சென்னை)

**பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்றால் தான் இலங்கைத் தமிழர்களுக்கான உரிமைகளைப் பெற்றுத்தர முடியும் என்று முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் கூறினார். ஈரோட்டில் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில், இலங்கையில் வாழும் தமிழர்களுக்காக 48 ஆயிரம் கோடி ரூபாவை இந்திய அரசு அளித்து இலங்கை அரசு மூலமாக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

இந்திய அரசு கொடுத்த அழுத்தம் காரணமாக வட மாகாணத்தில் சுதந்திரமான தேர்தல் நடைபெற்று சீ.வி. விக்னேஸ்வரன் தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளார். அந்த மாகாண அரசுக்கு பொலிஸ் வருவாய்த்துறை போன்றவற்றை ஏற்படுத்தும் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கான முழு உரிமைகளையும் பெற்றுக் கொடுக்க வேண்டுமெனில் இலங்கையுடன், இந்திய அரசு நல்ல உறவுடன் இருப்பது அவசியம். எனவே, பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்க வேண்டும்.

தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் பேசாமல் இருந்தாலே எங்களது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்துவிடும் என இலங்கைத் தமிழர் கட்சித் தலைவர்கள் கூறி வருகின்றனர்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கை அகதிகளின் பராமரிப்பில் இங்குள்ள சில அரசியல் கட்சித் தலைவர்கள் உள்ளனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தேவையற்ற வாதங்களை அவர்கள் எழுப்பி வடுகின்றனர்.

தானும் அரசியலில் இருக்கி றேன் என்பதை பொதுமக்களுக்கு மட்டுமன்றி, கட்சித் தொண்டர்களுக்கும் காண்பிக்க தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிக்கை வெளியிட்டு வருகிறார் என்றார். (அ-2)

## மெய்கண்டதேவர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், புத்தூர் கிழக்கு கன்னியர் வைரவர் அறநெறிப் பாடசாலை, அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் இணைந்து நடத்தும் மெய்கண்டதேவர் குருபூசை எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு புத்தூர் கிழக்கு, தல்லுடை, கன்னியர் வைரவர் ஆலயத்தில் வலி.கிழக்கு இந்து சமய அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி மா.தெய்வலட்சுமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத் தலைவர் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை, சிறப்பு விருந்தினராக அச்சுவேலி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் சைவப் புலவர் சி.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது சைவப் பிரசார அமைச்சர் சைவப் புலவர் க.நித்தியதசீதரன் வழங்கும் சிறப்புச் சொற்பொழிவு, மாணவர்கள் ஆற்றும் பேச்சு, நடனம், பக்திப்பாடல், பரிசளிப்பு ஆகியன இடம்பெறவுள்ளன. (7)

## இளைஞர் மாநாட்டில் ஸ்ரீரஜீவன் பங்கேற்பார்

(யாழ்ப்பாணம்)



நடைபெறவிருக்கும் பொது நலவாய இளைஞர் மகாநாட்டில் வட பகுதியை பிரதிநிதித்துவப் படுத்தி திரவியச்செல்வம் ஸ்ரீரஜீவன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இவர் அப்துல் கலாம் இளைஞர் கழகத்தின் தலைவராகவும் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் பாராளுமன்றத்தின் செனட் சபை உறுப்பினராகவும் வளர்ந்து வரும் இளைஞர் தலைவர் போட்டியில் ஒரே ஒரு தமிழ் இளைஞராக தெரிவு செய்யப்பட்டவரும் ஆவார். இவர் தற்போது ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் சுகாதார விருத்தி பட்டப் படிப்பை மேற்கொண்டு வருகின்றார். (அ-5)

## கலைமதி ச.ச.நிலைய கட்டடத் திறப்புவிழா

(கரணவாய்)

நவிண்டில் கலைமதி சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும் பொன் விழாவும் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத்தின் தலைவர் அ.அருட்செல்வம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி. ஸ்ரீநிதிநந்தசேகரம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக சிவஸ்ரீ உலகநாதன் விக்னேஸ்வரக்குருக்கள், கௌரவவிருந்தினர்களாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டபிள்யூ.பி. குமாரசிங்க, நெல்லியடிப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ. டி.என். காங்கர, எள்ளங்குள இராணுவ முகாம் இணைப்பாளர் பி.எஸ். புத்தாசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9-60)

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஸ்கந்தரரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வெற்றிபெறும் அணிக்கு நட்சத்திரங்களின் உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்வுள்ளது. (2-7)



ஹற்றன் நஷனல் வங்கி நெல்லியடிக்கிளையில் சிறுவர் சேமிப்பு மாதத்தை (சிங்கிதி சேமிப்பு மாதம்) முன்னிட்டு அண்மையில் சிறுவர்களுக்கான ஓவியப்போட்டி நடைபெற்றது. இதன்போது வங்கியினால் கௌரவிக்கப்பட்ட சிறுவர்களைப் படத்தில் காணலாம்.

(படம்:-தும்பளை செய்தியாளர்)

## இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டியது அவசியம்

உலக நாடுகள் இலங்கையுடன் இணைந்து செயற்பட வேண்டுமென அவுஸ்திரேலிய அரசாங்கம் கோரியுள்ளது.

30 ஆண்டுகால யுத்தத்தின் பின்னர் இலங்கையில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜுலியா கில்லார்ட் தெரிவித்துள்ளார்.

தாமும் பிரதமர் போனி அப்போடும் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். நீண்டகால அடிப்படையில் இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை எதிர்நோக்கி வரும் சவால்களுக்கு தீர்வு வழங்க பிராந்திய வலய நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் ஏனைய உலக நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## தேயிலை தோட்டத்திற்கு இளவரசர் சார்ள்ஸ் விஜயம்

(நுவரெலியா)

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கு வருகை தரவுள்ள பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் நுவரெலியாவிலுள்ள பெட்ரோ தேயிலை தோட்டத்திற்கு விஜயம் செய்ய உள்ளதாக பிரித்தானியாவின் டெய்லி மெயில் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

1954 ஆம் ஆண்டு மகாராணி இரண்டாவது எலிசபெத்தின் கணவரும் இளவரசர் சார்ள்ஸின் தந்தையுமான கோமகன் பிலிப் இலங்கைக்கு விஜயம் செய்த போது பெட்ரோ தோட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

அவர் தனது விஜயத்தின் ஞாபகார்த்தமாக தேயிலைச் செடி ஒன்றையும் நாட்டியிருந்தார். இந்த தேயிலை செடியில் இருந்து பறிக்கப்பட்ட தேயிலையில் தயாரிக்கப்பட்ட ஒரு கோப்பை தேநீர் கடந்த வருடம் நடைபெற்ற மகாராணியின் வைர விழாவில் 40 டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

தனது தந்தையின் விஜயத்திற்கு பின்னர் 59 வருடங்கள் சென்ற நிலையில் இளவரசர் சார்ள்ஸ் இந்த தோட்டத்திற்கு விஜயம் செய்வது இலங்கையில் தேயிலை தொழிற்துறைக்கு நல்ல முன்னேற்றத்தை கொடுக்கும் என குறித்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

## யோகா பயிற்சி அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். யோக அரங்கம் நடத்தும் யோகக் கலைப் பயிற்சிப்பட்டறைக்கான அறிமுக நிகழ்வு அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசைமடத்தில் (நல்லூர்த்தேரடி அருகே) நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இப் பயிற்சிப்பட்டறை தொடர்ந்து எதிர்வரும் 17 ஆம் திகதி வரை தினமும் மாலை 5 மணிதொடக்கம 6 மணிவரை நடைபெறவுள்ளது. இப்பட்டறையில் உடல் உள ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமான யோகப் பயிற்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுபவமுள்ள யோகா ஆசான்களால் பயிற்சி வழங்கப்படுவதுடன் கையேடுகளும் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சிப்பட்டறையில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் அறிமுக நிகழ்வில் அவசியம் கலந்து கொள்ள வேண்டும். அத்துடன் ஆர்வமுள்ள அனைவரும் பயிற்சிப் பட்டறையில் இணைந்து பயன் பெறமுடியும் என யாழ். யோக அரங்கத்தினர் அறிவித்துள்ளனர். (அ-7)

## தீபாவளி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தீபாவளிப் பண்டிகை நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பெண்கள் இல்ல ஆராதனை மண்டபத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்க தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிதியப்பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவசங்கர், சிறப்பு விருந்தினராக யா/கொட்டடி நமசிவாய ம.வி. அதிபர் ப.கணேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-7)

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு தொடர் சொற்பொழிவு பண்டிதர் சைவப் புலவர் பொன் சுகந்தனால் வல்வை. தீருவில் வயலூர் முருகன் ஆலயத்தில் நாளை மறுதினம் திங்கட் கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளது.

ஆறு தினங்கள் இடம்பெறவுள்ள தொடர் சொற்பொழிவில் விரதங்களும் அவற்றின் மகிமைகளும் எனும் தலைப்பில் தினமும் மாலை 4 மணிக்கு சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (அ-9)

# அடிப்படை வசதிகள் இன்றி கரும்புள்ளியான் கிராமம்

(பூந்தோட்டம்)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கரும்புள்ளியான் கிராமம் அடிப்படை வசதிகள் இன்றி காணப்படுவதனால் அங்கு வாழும் மக்கள் தினமும் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.**

வரலாற்று ரீதியில் பெயர் பெற்ற கரும்புள்ளியான் கிராமம் நீர் வசதிகள், வீதி வசதிகள், போக்குவரத்து வசதிகள் இன்றி இன்று சோபை இழந்து காணப்படும் நிலைக்கு மாறியிருக்கின்றது.

யுத்தத்தின் தாக்கங்கள் இம் மக்களை இடம்பெயரச் செய்து பல துன்பங்களை அனுபவித்திருந்த நிலையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு நான்கு வருடங்கள் ஆகியும் அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வில்லை என விசனம் தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள மைதானம் துப்புரவு செய்யப்படாமையினால் இளைஞர்களும் சிறுவர்களும் தமது விளையாட்டு திறனை பறைசாற்ற முடியாத துன்பகரமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன் தமது தேவைக்கான நீரை பெற்றுக் கொள்வதிலும் சிரமங்களை எதிர்கொள் வது இப் பகுதி மக்களுக்கு தொடர்கதையாகி விட்டது.

இக் கிராமத்திற்கு அண்மையிலேயே மாந்தை கிழக்கிற்கான பாரிய குடிநீர் தாங்கி நிறுவப்பட்டுள்ள போதிலும் இப் பகுதி மக்கள் இதனூடாக நீரை பெற்றுக்கொள்வது எட்டாக்கனியாகியுள்ளது அத்துடன் இங்கு பல குடும்பங்கள் தற்போதும் கொட்டகைகளில் வாழும் நிலை காணப்படுகின்றது.



இதேவேளை உள்ளக வீதிகளும் பிரதான வீதிகளும் நீண்ட காலங்களாக திருத்தம் செய்யப்படாமையினால் இவ் வீதிகளை பயன்படுத்த முடியாதுள்ளதுடன் மழை காலத்தில் மக்கள் போக்குவரத்துக்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர். சுமார் 65 குடும்பங்கள் வசிக்கும் இக்கிராமத்தில் மின்சார வசதிகள் இன்றி பெரும் இடையூறுகளுக்கு முகம் கொடுப்பதுடன் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கும் பெரும் பாதிப்புகள் ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டுகின்றனர். (ம-266)

## டெங்கை கட்டுப்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல்

(பூந்தோட்டம்)

மழை காலம் தொடங்கியுள்ள நிலையில் வட மாகாணத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் முன்னேற்பாட்டு செயற்றிட்டத்தை ஆரம்பிக்கும் முகமாக வட மாகாண சுகாதார அமைச்சரினால் நேற்றுசுகாதார சேவை அதிகாரிகளுடன் வவுனியாவில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் டெங்கு நோய் பரவுவதற்கு உள்ள சாத்தியப்பாடுகள், அதனை தடுப்பதற்கு மாவட்ட சுகாதார திணைக்களங்களில் உள்ள வளங்கள், டெங்கை கட்டுப்படுத்துவதற்கு மாவட்ட ரீதியாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் உட்பட சுகாதார நிலைமைகள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது.

வவுனியா பிராந்திய சுகாதார பிரதி பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கம், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் உட்பட வட மாகாண சுகாதார திணைக்களங்களின் தலைமை அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். (ம-266)




## பாராட்டு விழாவும் மலர் வெளியீடும்

(கிளிநொச்சி)

நாடகக் கலைஞர் கலாபூஷணம் மா. அனந்தராசனுக்கான பாராட்டும் மலர் வெளியீடும் நாளை ஞாயிறுக்கிழமை மாலை 2.30 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் ஓய்வு பெற்ற அதிபர் செ. சதானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

'அனந்தம்' மலர் வெளியீட்டுரையை வேல் நந்தனும், நயப்புரைகளை பரா.ரதீஸ், ஆ. கந்தையா ஆகியோரும் நிகழ்த்துவர்.

அல்வாயூர் கவிஞர் நாடகமன்றத்தின் ஏற்பாட்டில் மேற்படி நிகழ்வு நடைபெறவுள்ளது. (ம-254)

## கண்டாவளையிலுள்ள மயானங்கள் பற்றைக்காடுகளாக மாறியுள்ளன

### மக்கள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் காணப்படுகின்ற இறந்தவர்களை தகனம் செய்கின்ற மற்றும் புதைக்கின்ற மயானங்கள் துப்புரவு செய்து பாதுகாக்கப்படாது பற்றைக்காடுகளாவே காணப்படுகின்றன.

இப்பிரதேசங்களில் காணப்படுகின்ற 10 வரையான மயானங்களில் பல எல்லைகள் வரையறுக்கப்பட்டு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படாமையினால் இறந்தவர்களின் உடல்களை ஆங்காங்கே காணப்படுகின்ற காடுகளின் இடைவெளிகளிலேயே தகனம் செய்ய வேண்டிய, புதைக்கப்படவேண்டிய நிலை காணப்படுகின்றது.

இறந்தவர்கள் தொடர்பான நினைவு தூபிகளை அமைக்க எண்ணுகின்றவர்களும் அவ்விடங்களில் வேறு நபர்களின் சடலங்கள் எரிக்கப்பட்டும், புதைக்கப்பட்டும் காணப்படுகின்றமையால் தமது இறந்த உறவினர்களின் நினைவு தூபி அமைப்பதில் சிரமம் காணப்படுகின்றது.

எனவே மயானங்களை துப்புரவு செய்து பேணிக்காக்கும் பட்சத்தில் அங்கு இடம் பெறுகின்ற சட்ட விரோதமான மதுபான உற்ப த்தி, அனுமதி அற்ற முறையில் கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டுகின்ற நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த முடியும் என பாதிக்கப்பட்ட மக்களும் பிரதேச வாசிகளும் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர்.(ம-263)


## வவுனியா நகரசபை நூலகம் சிறந்த நூலகமாக தெரிவு

(பூந்தோட்டம்)

தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினரால் நடாத்தப்பட்ட போட்டிகளில் 2013 ஆம் ஆண்டுக்கான இரணடாவது நூலகமாகவும், சிறந்த நூலகமாகவும் வவுனியா நகரசபை நூலகம் தெரிவு செய்யப்பட்டு ள்ளதாக நரசபையின் செயலாளர் கே. சத்தியசீலன் தெரிவித்தார்.

இதேவேளை 2012 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாத நிகழ்விற்கான விருதும் நகரசபை நூலகத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அதற்கான பரிசில்கள் கல்வி சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்கவிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-266)







வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் முத்தையா மண்டபத்தில் இடம் பெற்ற போது வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதனையும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சிறுமிக்கு பிரதேசசபையின் செயலாளர் திருமதி கி.சுகந்தி பரிசில் வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)



# தீபத் திருநாள் சிறப்பு மலர் 02.11.2013




அன்பர்கள். நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபத் திருநாள் வாழ்த்துக்கள்

**சித்தா றெஜிபோம் வேக்ஸ்**

49 A, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

மங்கலகரமான நிகழ்வுகளுக்குரிய றெஜிபோமில் நவீன முறையில் (Indian Technology) வடிவமைக்கப்பட்ட எழுத்துக்கள் (ஆங்கிலம் தமிழ் 3 D) பூக்கள், உருவங்கள், ஐசிங் கட்டிங் மற்றும் நீங்கள் விரும்பிய டிசைன்களில் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**வர்த்தகர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.**

**தொடர்புகொள்ள: 0750394357**




## ஒளிமயமான வாழ்வு மலரட்டும்

தீபமும் ஒளியும் இணைந்தது தீபாவளி. தீபாவளி என்பதற்குள்ளேயே ஒளி இருப்பது போல ஒவ்வொருவருக்குள்ளேயும் ஒரு ஒளி உண்டு. வீட்டிலே விளக்கேற்றினால் இருள் அகன்று ஒளி வருகிறது. அந்த ஒளி பிறந்ததும் இருள் அகல்வதைப்போல மனதிலுள்ள ஒளியை மக்கள் உணர்ந்தால் மனதிலுள்ள இருள் அகன்றுவிடும். அந்த மன இருளை அகற்றி ஒளியைக் காண்பதுதான் வாழ்க்கை. அந்த வாழ்க்கை ஒளி என்பது அனுபவத்தால் அடைவது. அனுபவித்து பின் ஆனந்திப்பது என இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

வாழ்க்கை என்றால் இன்பமும் துன்பமும் கசப்பும் இருக்கும்.எளிமையும் ஏழ்மையும் வலிமையும் இருக்கும். இந்த மூன்றும் சேர்ந்து திரிசூலம் போன்றதுதான் வாழ்க்கை. இத்தனையும் இருந்தாலும் தீபாவளியை உற்சாகமாக கொண்டாடுவது என்பது வழிவழியாக வந்த வழக்கம். தீபாவளியன்று இனிமை இருக்கவேண்டும். இன்பம் இருக்கவேண்டும். துன்பம் இருக்கக்கூடாது. துன்புறுத்தலும் இருக்கக்கூடாது. அனைவரும் இன்பமுடன் வாழட்டும். மற்றவரையும் வாழவிடட்டும். தீபாவளித்திருநாளில் ஒளிமயமான வாழ்வு மலரட்டும் என்று ஆசீர்வதிக்கின்றோம்.


**உலக நாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்

* 220 ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
* சகல நாடுகளுக்கும் 3 - 5 வேலைநாட்களில் சேவை
* மிக குறைந்த கட்டணம் மிக விரைவான சேவை.

வாடிக்கையாளர்களுக்கான விசேட சலுகை U.K. 3Kg பொதிக்கு 2700/= ரூபா மட்டுமே

பல நாடுகளுக்கு கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன



(6/5242)

**கிரிஷான்** Worldwide Courier Service

499/1, பருத்துறை வீதி, நல்லூர், (நல்லூர் கோவில் முன்பாக)

Hot Line: +94770569642, +94770166746





அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

**யாழ்.ஒடியல் கூழ் விற்பனைக்கு...**

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட ஒடியல் கூழ் ஒவ்வொரு சனி, ஞாயிறு கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கு பெற்றுக்கொள்ளலாம். 500 மி.லீ. 150/- மட்டுமே

**சண்ஜெயா பூட் லான்ட்**

கிளை

**713, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.**

**021 221 7070, 0776777500**

நாடு முழுவதற்குமான குளிரூட்டப்பட்ட 28 இருக்கைகள் கொண்ட குளிரூட்டி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி adjustable Seat , Cool box பஸ் சேவைகள்.

**1 கி.மீ.இற்கு 65/-**

மற்றும் வான் சேவையும் உண்டு.

தொடர்புகளுக்கு: 0777474111 0215671671








அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்

# ராம்கோ சீமெந்து




**RAMCO CEMENT**

**ராம்கோ சீமெந்தை பயன்படுத்துங்கள்! உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்!**

ஆசியாவின் முதலாம் தர(நம்பர்-1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட RAMCO சீமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

★ இலங்கையின் SLS 107 தரச்சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து
★ 54 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சீமெந்து
★ மிகமிக உயர்தரம் கொண்ட சீமெந்து
★ ISO 9001 உலகத்தர சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து

**ராம்கோ சீமெந்தின் ஏக இறக்குமதியாளர்கள்**

# ஏஸ்வர பகவான் அன் கம்பனி

தொ. பே: 021 222 7603, 021 222 2350

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.





அனைவருக்கும் ஒளிமயமான தீபத் திருநாள் வாழ்த்துக்கள்

**தீபாவளி நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனையும் பரிசுக் குலுக்கலும்**

முதலாம் பரிசு - புறொஜெக்டர்,
2 ஆம் பரிசு L.E.D. T.V. 32"
3 ஆம் பரிசு L.E.D. T.V. 21"
மேலும் பெறுமதியான 10 ஆறுதல் பரிசுகள்

**உங்கள் தெரிவுக்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்**

- ✔ பாடசாலை உபகரணங்கள் மற்றும் ஆய்வு கூட உபகரணங்கள்,
  500 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு மாபெரும் பரிசுக் குலுக்கல் க்ளில் பங்குபெறும் வாய்ப்புகள்
- ✔ யாழ்.நகரின் முன்னணியான புத்தக மற்றும் ஸ்ரேசனறி விற்பனையாளர்கள்
- ✔ யாழ்.நகரில் எங்குமே இல்லாத பிரமாண்ட மான காட்சியறை
- ✔ நம்பமுடியாத நம்பிக்கை மலிவு விற்பனை யும்
- ✔ 10% - 50% வரையான விசேட விலைக் கழிவுகள் (நிபந்தனைக்குட்பட்டது)
- ✔ இசைக்கருவிகள் பைண்டிங் லெமனேற்றிங் மெசின்கள்

உங்கள் தேவைக்கு உங்கள் சிந்தனைக்கு நீங்களே தெரவு செய்யக்கூடிய விசேட வசதிகள்

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ**

இல.212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.





அனைவருக்கும் தீபத் திருநாள் வாழ்த்துக்கள்

மானிப்பாயில்.... பஜாஜ் மோட்டார் சைக்கிள் விற்பனை காட்சியறை

BAJAJ

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் சேவை முகவர்

றஞ்சித் மோட்டோர்ஸ் (எம்மிடம் கொள்வனவு செய்யப்படும் அனைத்து மோட்டார் சைக்கிள்களுக்கு மேலதிகமாக இரண்டு சேர்விஸ் வழங்கப்படும்)

RRSC Motor Engineers

**றஞ்சித் மோட்டோர்ஸ்**

**றஞ்சித் றிப்பயறிங் அன் சேர்விஸ்**

311, யாழ்.வீதி, மானிப்பாய்.

**தொ.பே: 0773107549, 0772269883, 021 2255228**

# குமுதினி நினைவுத் தூபி புனர்நிர்மாணிக்கப்படுகிறது

குமுதினி படுகொலை நினைவுத்தூபி மண்டபத்தில் புதிதாக புனர்நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக நெடுந் தீவு பிரதேச சபைத் தவிசாளர் டானியேல் றெக்சியன் தெரிவித்துள் ளார்.

குமுதினி படுகொலை நினைவு மண்டபமானது 1985 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட 36 மக்களின் நினைவாக அமைக்கப்பட்டது.

அதன் புனிதத்தன்மை புலப்படும் வகையிலும் புதிய வடிவில் தோற்றம் பெறும் வகையிலும் அதன் முன்பகுதி மண்டபத்தின் திருத்த வேலைகள் நடைபெறுகின்றன.

எனவே இக்கட்டடமானது நெடுந்தீவு பிரதேசத்தின் வரலாற்றை பறைசாற்றுவதாகவும் அமைந்துள்ளதால், நெடுந்தீவு பிரதேச சபை யின் கூட்டத்தீர்மானத்துக்கமைவாக இதை புனரமைப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டு அச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பிரிட்டன் பிரதமரை கண்டித்து லண்டனில் மாபெரும் பேரணி

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டிற்கு பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் வருவதைக் கண்டித்து லண்டனில் மாபெரும் பேரணி ஒன்றை பிரித்தானிய தமிழர் பேரவை ஏற்பாடு செய்துள்ளது. இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு என்பாக்மெட் நிலக்கீழ் புகை யிரத நிலையத்திற்கு அருகாமையில் ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது பிரித்தானிய பிரதமர் இலங்கை பயணத்தை நிறுத்த வேண்டும், பொதுநலவாய நாடுகளின் கூட்டமைப்பிலிருந்து இலங்கையை நீக்க வேண்டும், இலங்கையில் தமிழ் மக்கள் மீதான இனவழிப்புக்கு நீதி வேண்டும் என்ற கோஷங்களை மையப்படுத்தி ஒரு மாபெரும் பேரணிக்கான அழைப்பை பிரித் தானிய தமிழர் பேரவை விடுத்துள்ளது. (அ-2)

# பொதுநலவாய உச்சி மாநாடு முதலீடுகளுக்கான தங்க கதவு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் மாநாடு இலங்கையில் நடத்தப்படு வது நாட்டுக்கு கிடைத்த கௌரவம் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

பேருவளையில் நடைபெற்ற சந்திப் பொன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பொதுநலவாய நாடுகளின் மாநாடு காரணமாக இலங்கை முழு உலகத்தின் கவனத்தை ஈர்க்கும். போரை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து வெளிநாடுகளின் தலைவர்கள் நேரில் கண்டறிந்து கொள்ள முடியும்.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு இலங்கைக்கு முதலீடுகள் வந்து குவியும் தங்க கதவு. ஜனாதிபதி இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தி நாட்டை ஆசியாவின் அற்புதமாக மாற்ற நடவடிக்கை எடுத்து வரும் சந்தர்ப்பத்தில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு காரணமாக நாட்டின் மனித வளம் உட்பட பல துறைகளில் அபிவிருத்திகள் ஏற்படும் என்றார். (அ-2)


## அன்பொளி கல்வியகம்

யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2013

சித்தியடைந்த மாணவர்களுக்கான

## பரிசளிப்பு நிகழ்வு

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 03.11.2013 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நாச்சிமார் கோவிலடி (ராஜா கிறீம் ஹவுஸ்) சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/5315) இயக்குநர்


## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் தலைமை அலுவலக எல்லை சுவர் அமைத்தல்

**கேள்விப்பத்திரம் வழங்கல் - கால நீடிப்பு**

மேற்படி வேலைக்கு 11.10.2013ம் திகதிய வலம்புரி பத்திரி கையில் வெளியிடப்பட்ட அறிவித்தல் தொடர்பாக கேள்விப்பத்திரம் வழங்குவதற்கான காலம் 20.11.2013 திகதி பி.ப.2.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள் ளலாம்

திரு.ச.சிவகுமாரன்
உபதவிசாளர்,
வலிதென்மேற்கு பிரதேசசபை,-மானிப்பாய்.

(சி-5336)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் 2010 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் என்பவற்றை 2014.01.01 தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரைகுத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி | : | 19.11.2013 பி.ப 1.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி | : | 20.11.2013 பி.ப 12.00 மணிவரை |
| கேள்விதிறக்கும் திகதி | : | 20.11.2013 பி.ப 2.00 மணிவரை |

வலிகாமம் தென்மேற்குபிரதேசசபை, மானிப்பாய்"என்றமுகவரிக்குஅரக்குமுத்திரையிட்டுதபால் உறை யின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல்வேண்டும். அல்லதுஅதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்

உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்"என்னும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

2. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாளஅட்டையும் அதன் நிழற் படப் பிரதியையும் கொண்டுவருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சிமன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்டஎவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட வதுடன் கேள்விவைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
4. ஆகக் குறைந்தகேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்விநிராகரிக்கப்படுவ துடன் கேள்விவைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
5. இறைச்சிக் கடைக்கு மாதாந்தவாடகை செலுத்தப்படல் வேண்டும்.
6. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாதவாடகை என்பவற்றிற்கு 2%தேசத்தைக் கட்டியெழு ப்பும் வரி (N.B.T) செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தலுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளைநிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது. ஏற்கவோ/நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
8. தெரிவுசெய்யப்படும் கேள்விகாரர்கள் கேள்வித் தொகையில் 1/3 பகுதியை 29.11.2013ஆம் திகதி பி.ப 1.00 மணிக்குமுன்னர் செலுத்திசபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ளவேண்டும்.
9. கேள்வி சம்பந்தமான மேலதிக விடயங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு. சண்முகம் சிவகுமாரன்**
**உபதவிசாளர்,**
**வலி. தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(சி-5336)

**01.11.2013**

### 2014 ஆம் ஆண்டிற்கான கேள்வி அட்டவணை

| | சந்தைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன் இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் N.B.T தவிர | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகைN.B.T தவிர | மாதாந்த வாடகை N.B.T தவிர |
|---|---|---|---|---|---|
| 1. | மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | |
| | 1. மானிப்பாய் பொதுச் சந்தை | 1000.00 | 15000.00 | 1322200.00 | |
| | 2.மானிப்பாய் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 476300.00 | 400.00 |
| | 3. மானிப்பாய் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 136100.00 | 300.00 |
| | 4. மானிப்பாய் பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 412500.00 | 400.00 |
| 2. | மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | |
| | 1.காக்கைதீவுப் பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 420178.00 | |
| | 2.நவாலி பிரசாத் சந்தை | 1000.00 | 5000.00 | 230158.00 | |
| | 3.சாவற்கட்டுச் சந்தை | 1000.00 | 5000.00 | 1908050.00 | |
| | 4. நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 99864.00 | 400.00 |
| | 5.நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 33055.00 | 300.00 |
| | 6. நவாலி பிரசாத் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 54506.00 | |
| | 7. ஆனைக்கோட்டைச் சந்தி மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 280390.00 | |
| | 8. ஆனைக்கோட்டைச் சந்தி கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 55000.00 | |
| 3. | பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் | | | | |
| | 1.பண்டத்தரிப்பு பொதுச் சந்தை | 1000.00 | 15000.00 | 1245405.00 | |
| | 2.பண்டத்தரிப்பு சாந்தை சந்தை | 500.00 | 2000.00 | 88012.00 | |
| | 3.பண்டத்தரிப்பு பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 182160.00 | 600.00 |
| | 4.பண்டத்தரிப்பு பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 121770.00 | 600.00 |
| 4. | பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | | | | |
| | 1.மாகியம்பிட்டி பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 146663.00 | |
| | 2.இளவாலை பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 145200.00 | |
| | 3. மாதகல் பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 109667.00 | |
| | 4.மாகியம்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 56210.00 | 250.00 |
| | 5.மாகியம்பிட்டி சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 11000.00 | 250.00 |
| | 6.மாதகல் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 51150.00 | 250.00 |
| | 7. இளவாலை பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 142301.00 | |

அன்புதான் இன்ப ஊற்று
அன்புதான் உலக மகா சக்தி – அசோகன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எம் அகந்தையை அழித்தால் மட்டுமே மனிதமாண்பு உலகில் மதிக்கப்படும்

இன்று தீபாவளித்திருநாள். நரகாசூரனை வதம் செய்து தர்மம் நிலைநாட்டப்பட்டதான நாளும் இதுவே. அதர்மம் அழிந்து தர்மம் நிலைநிறுத்தப்பட்டதன் காரணமாக தீப ஒளி ஏற்றி அந் நாளை மக்கள் கொண்டாடிமகிழ்ந் தனர். அதுவே தீபாவளித் திருநாளாயிற்று.

நரகாசூரனை வதம் செய்வதென்பது எங்கள் மனங்களில் இருக்கக் கூடிய அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் எனும் தீயவை அழிவதைக் குறிப்பதாகும்.

நரகாசூரன் என்ற கொடியவனை கிருஷ்ண பரமாத்மா அழிக்கின்றார். இங்கு அழிப்பு என்பது நரகாசூரன் எனும் அகந்தை வடிவத்தையாம்.

எங்களிடம் இருக்கின்ற அகந்தை அழியும் போது உள்ளத்தில் ஒளி பிரகாசிக்கும். அத்தகைய உள்ளொளி பிரகாசித்தால், அது இப் பிரபஞ்சம் முழுமைக்கும் பேரொளியாக அமையும்.

இத் தத்துவத்தைக் குறிப்பிடும் நாளே தீபாவளித்திருநாளாகும். எம்மிடம் இருக்கின்ற அகந்தை அழிய வேண்டுமாயின் எம் உள்ளத் தில் இறைவன் குடியிருக்க வேண்டும்.

உள்ளம் பெருங்கோயில் என்ற அடிப்படையில், எங்கள் உள்ளக் கோயிலில் இறைவனை குடியிருத்த வேண்டும்.

உள்ளக் கோயிலில் இறைவன் குடியிருந்து விட்டால், எங்கும் அன்பு மயமாகிவிடும். அன்புதான் இன்ப ஊற்று. ஆகவே உலகம் எங்கும் ஒருகுறையும் இன்றி மக்கள் வாழ்வர். அந்த வாழ்வு தீப ஒளிப்பிரகாசம் போல அமையும் என்ற தத்துவத்தையே இன்று உலகவாழ் இந்துக்கள் அனுஷ்டிக்கும் தீபாவளித் திருநாளின் உட்பொருள் பகர்ந்து நிற்கிறது.

எனினும் எங்களிடமிருக்கின்ற ஆணவம் – அகந்தை – செருக்கு அழிந்ததா! என்றால் இல்லவே இல்லை. இங்குதான் தீபாவளித் திருநாளின் தத்துவம் கெட்டுப்போகிறது.

சமாதானம் என்று கை கூப்பி வாக்குக் கேட்பவர்கள், ஆட்சி அமைத்தபின் யுத்தத்தின் மூலமே சமாதானம் என்கிறார்கள்.

ஜனநாயகம் என்று மார்தட்டுவோர் அப்பாவி பொதுமக்களின் மார்புகளை துப்பாக்கி வேட்டுக்கள் பதம் பார்க்கும் போது அதற்கு நியாயம் தேடுகிறார்கள்.

தமிழர்களின் உரிமை. அதற்காகவே எங்கள்பணி என்று வாக்குப் பெற்று வடக்கில் ஆட்சி அமைத்தவர்களில் சிலர் பொதுமக்களைக் கண்டால் பாராமுகமாக இருக்கிறார்களாம். எப்படி இருக்கிறது நிலைமை?

மக்கள் பணி என்று கூறி தாங்களாகவே முன்வந்து தேர்தலில் போட்டியிட்டு, வாக்குப்பெற்று, பதவி கிடைத்ததும் எல்லாவற்றையும் மறந்து பதவித்திமிரில் இருக்கிறார்கள். இதுதான் சொல்வது; சிலருக்குப் பதவியைக் கொடுத்துப் பார்க்க வேண்டும். சிலரிடம் பதவியைப் பறித்துப் பார்க்க வேண்டும் என்று.

எதுவாயினும் நரகாசூரர்கள் அழிக்கப்பட வேண்டும். தர்மம் நிலை நாட்டப்பட வேண்டும். எங்கும் எதிலும் எப்போதும் அன்புநிலைப்பட்ட மக்கள் சமூகம் உருவாக வேண்டும்.

அப்போதுதான் இன, மத, மொழி என்ற பேதங்கள் அழிந்து மனிதம் என்ற பொதுமை உயர்வு பெறும்.

ஆக, மனிதம்மாண்புபெற இன்றைய தீபாவளித் திருநாளில் நாம் அனைவரும் அன்பெனும் இன்ப ஊற்றை மற்றவர்களை நோக்கிப் பாய்ச்சுவோம். நிச்சயம் அது பயன் விளைவிக்கும்.

# வடக்கு முதலமைச்சர் கூறுவதுபோல் இங்கு எப்பிரச்சினையுமில்லை

## யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்– சிங்கள மக்களின் கலாசாரம் ஒன்றிணைந்துள்ளதுடன் வடபகுதியில் தமிழ்பேசும் பொலிஸார் பெருமளவில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளமையால் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறுவது போன்று இங்கு எந்தப் பிரச்சினையும் நடைபெறாது என காங்கேசன் துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜயசிறி, யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது.

இச்சந்திப்பில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மாகாண சபையின் முதல் அமர்வில் வடக்கு மாகாணத்தில் தமிழ் மொழி தெரியாத பொலிஸார் கடமையாற்றுவதனால் அவர்கள் தமிழ்மக்களின் மொழி, பண்பாடு கலாசாரத்தை புரிந்து கொள்ள முடியாமல் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என உரையாற்றியிருந்தார்.

இவ்வுரை தொடர்பில் பொலிஸாரிடம் ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதியில் இப்போது அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் தமிழ்மொழி பேசுபவர்களிடம் தமிழ்மொழியிலேயே முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் நடைபெற்ற யுத்தத்தின் பின்னர் வடக்கில் 60 தமிழ்மொழி தெரிந்த பொலிஸ் பரிசோதகர்கள் பணிக்கு இணைக்கப்பட்டுள்ளனர். இவற்றில் இருவர் யாழ்.மாவட்டத்தில் பணியாற்றுகின்றனர்.

வடக்கில் ஏற்கனவே 460 தமிழ் பேசும் பொலிஸ் கொஸ்தாபர்கள் உள்ள நிலையில் இன்றும் 800 பேர் பயிற்சி முடித்து இணைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கிலுள்ள நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்படும் மேலதிக அறிக்கை (விறிப்போர்) கூட தமிழ்மொழியிலேயே சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றது.

இதனைவிட தமிழ்மொழி தெரியாத பொலிஸாருக்கு தமிழ்மொழி மூல வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

இம்மொழித்திட்டம் 1996 ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பொதுவாக சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் ஒரே கலாசாரம்தான் உள்ளது. நீங்களும் சோறு சாப்பிடுகின்றீர்கள். நாங்களும் சோறுதான் சாப்பிடுகின்றோம்.

பக்கச்சார்பாக இன அடிப்படை பார்க்காமல் இங்குள்ள பொலிஸார் செயற்படுகின்றனர்.

தமிழ்மற்றும் சிங்கள மக்கள் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் வாழ்கின்றனர். ஆகவே முதலமைச்சர் கூறுவதுபோன்று இங்கு பிரச்சினை ஏற்படாது என அவர்கள் தெரிவித்தனர். (அ-4)

## மாற்றுத் திறனாளி சிறுவனுக்கு உதவி

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாற்றுவலுவுடைய சிறுவனொருவனுக்கு மாதாந்தம் சிகிச்சை பெறுவதற்கு செல்வதற்கான போக்குவரத்துச் செலவாக 900 ரூபா வழங்கப்பட வுள்ளதாக பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.

மேற்படி தொகையினை மாற்றுவலுவுடையோருக்கான தேசிய செயலகம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-60)

## சிதம்பர கல்லூரி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை சிதம்பர கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் பழைய மாணவர் சங்க அனுசரணையுடன் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கே.ராஜதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் 3 இலட்சம் ரூபா பணப்பரிசு வகுப்புக்களில் உயர் புள்ளி பெற்ற மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. (அ-2)

## கந்தசஷ்டி திருவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிழக்கு திருவருள்மிகு குருநாத சுவாமி கோயில் கந்த சஷ்டி திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு அபிஷேகமும் மாலை 4 மணிக்கு சூரசங்காரமும் இடம்பெற்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த் தோற்சவமும் மாலை 5 மணிக்கு திருக்கல்யாணமும் இடம் பெறவுள்ளது. (அ-7)

## தீபாவளி விழா

(யாழ்ப்பாணம்)

இன்று பிற்பகல் 2 மணிக்கு தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் தீபாவளி விழா நடைபெற உள்ளது.

ஆண்டு தோறும் தீபாவளி நாளில் முதியோரை மகிழ்விப்பதற்காக மகாஜனாக் கல்லூரி மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தீபாவளிச் சிறப்பிதழான இந்து ஒளி மலர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் சிவபூமி முதியோர் இல்லத் தீபாவளி விழாவில் வெளியிட்டு வைக்கப்படும். (ஏ)

## மக்கள் வங்கி கிளைகள் இன்று திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தீபாவளி தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கியின் சாவகச்சேரி, சங்கானை, வல்வெட்டித்துறை கிளைகள் என்பன இன்று காலை 9 மணி முதல் பி.ப.1.30 மணி வரை வாடிக்கையாளர் விசேட சேவைக்காகத் திறந்திருக்கும் என மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் கே.சுசீந்திரன் அறிவித்துள்ளார். (அ-7)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை

நமது ஆன்ம– உடல்– மன வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் பல்வேறு கட்டுப்பாடுகளிலிருந்தும் கிடைக்கும் விடுதலையாகும். இந்த விடுதலை நமது மனதின் நிபந்தனைகளால் கட்டுப்படாத உலகக் குடிமகனாகி விடுகின்ற ஒரு மாபெரும் எல்லைப் பரம்பைத் தருகிறது. இது நாம் ஒரு குடும்பத்தை மட்டும் சார்ந்துள்ளவர்கள் அல்ல; இந்த மனிதகுலக் குடும்பத்திற்கே உரியவர்கள் என்று நம்மை எண்ணவைக்கும். இந்த விடுதலை இதயத்தின் மலர்ச்சிக்கு உறுதுணையாகவும் ஆகிறது.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## சிகரத்தை எட்ட சிரமப்படு!



❖ உண்மை என்னும் பாதையில் இருந்து அணுவளவும் பிறழ்ந்து செல்லாமல் இருப்பதில் கவனம் செலுத்துங்கள்.


❖ அமைதி என்னும் துறைமுகத்தை அடைவதற்கு முன் பெரும் புயல்களையும் அலைகளையும் சமாளித்துத்தான் ஆகவேண்டும்.

❖ கடுமையான சோதனைகளை எதிர்கொள்ளாமல் மனிதன் சிகரத்தை எட்டிப்பிடிக்க முடியாது.

❖ மற்றவர்களுக்கு நன்மை செய்பவன் தர்மவழியில் செல்கிறான். தீமை செய்பவன் பாவவழியைத் தேர்ந்தெடுக்கிறான். அதற்கான பலனை அவரவர் பெறுவது உறுதி.

❖ வாழ்வில் ஒவ்வொரு நாளும் முன்னேறிக்கொண்டே செல்லுங்கள். இலட்சியத்தை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். அதற்கு மாறானதைப்பற்றியும் சிந்திக்காதீர்கள்.

❖ எப்போதும் நேர்மையைப் பின்பற்றுங்கள். விடாமுயற்சியுடன் போராடுங்கள். உண்மையாக உழையுங்கள். தன்னம்பிக்கையை கைவிடாதீர்கள். இலட்சியத்தை நிச்சயம் அடைந்து விடுவீர்கள்.



# தீபத் திருநாள்

சிறப்பு மலர் 02.11.2013

## தமிழ் மக்களின் சுயமும் பலமும் உலகறியச் செய்திட நல்வாழ்த்துக்கள்



அன்பிற்கினிய அனைத்துள்ளங்களுக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள். எமது தமிழ்மக்களின் சுயமும் பலமும் உலகறியச் செய் திட்ட மகிழ்வுடன் இனிய தீபாவளி திரு நாளின் மகிழ்வும் இரட்டிப்பாகின்றது என சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள் தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவ் வாழ்த்துச்செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

யுத்தம் நடந்த மண்ணில் காலம் கடந்த போதும் இன்று பலவிதத்திலும் புதுவிதத்திலும் யுத்தம் நடந்து கொண்டிருக்கின்றது. அசுரன் இன்னமும் குடி கொண்டிருக்கின்றான். கிருதயுகத்தில் தேவலோகம், அசுரலோகம் என ஒவ்வொரு உலகில் வாழ்ந்துவந்த தேவர்களும் அசுரர்களும் கலியுகத்தில் உலகங்கள் அற்றுப்போய் அவ்வுலகங்கள் எம்மனதில் ஒன்றாகிவிட்டது. பலர் மத்தியில் கோபம், பொறாமை, அழுக்கு, புகைப்பது, குடிப்பது, ஆபாசப்பேச்சுக்கள், வக்கிரபுத்திகள், ஏமாற்றுவது, புறம்கூறுவது, பாலியல் வக்கிரங்கள், சுயநலம், திருட்டு, வரதட்சணை என தேவ அசுர யுத்தம் செய்து கொண்டிருக்கின்றது.

அத்துடன் பார்வைகளிலும், செயல்களிலும் அசுரன் இன்னமும் குடி கொண்டிருக்கின்றானே. வறுமையிலும், பசியிலும், சுகவீனங்க ளிலும், துக்கங்களிலும், துயரத்திலும், வேலையில்லாப் பிரச்சினைகளிலும், துணையின்றி உள்ள பெண்களை தலைமைத்துவமாக கொண்டு வாழும் பெண்களின் வாழ்விலும், நம்மை அசுரன் வாட்டிக் கொண்டிருக்கின்றானே.

மதமாற்றம், காணிசுவீகரிப்பு, பதவிப் போட்டிகள், அடக்குமுறைகள் என பல புது வித அசுரனும் மக்கள் வாழ்வை சிதைக்கின்றன. இவை எல்லாம் ஒருவகையில் ஒழிந்துகொண்டிருக்கும் அசுரனின் செயற்பாடுகள் அல்லவா? இவை மக்கள் வாழ்விற்கு இருட்டல்லவா? ஒரு அறையின் இருட்டைப்போக்க எப்படி வெளிச்சம் தேவைப்படுகின்றதோ, அதேபோல் நம்மில் இருக்கும், நம்மைச் சூழ்ந்திருக்கும் இருட்டு என்னும் அசுரனை அழிக்க ஞான ஒளி, அறிவு ஒளி உண்மை ஒளி என்ற வெளிச்சம் தேவைப்படுகின்றது. அறையின் இருளைப்போக்க தீபத்தின் ஒளி உதவுவது போல், உண்மை ஒளியாகிய இறை ஒளி தேவைப்படுகின்றது. அந்த சத்தியமான ஒளியைத்தான் நாம் "தீப ஒளி" என்று அழைக்கின்றோம்.

இறை ஒளி மூலம் எங்கள் மக்களை பீடித்திருக்கும் இருள் அகலட்டும். சுபீட்சமும், சகவாழ்வும், பிறக்கட்டும். இறைஒளி அசுரனை அழிக்கட்டும். மக்கள் குதூகலத்துடன் தீபங்கள் ஏற்றி மகிழ்வுடன் தீபாவளி கொண்டாடட்டும். அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

### தீபாவளிப் பெருநாள்

தீபாவளிப்பெருநாள்
தீபங்களின் ஒளிநாள்
வறுமையின் கொடுமைக்கு
விடிவு காணும் ஒருநாள்
கலைகளை பிறப்பிக்கும்
கனிமிகு திருநாள்
கஞ்சத்தனம் போக்கும்
அருள்மிகு கருணைநாள்
கனவுகளில் மலர்ந்த
நாட்கள் நனவிலே
வந்துதிக்க
புதியதோர் உலகம் பூக்க
இன்பத் தீபாவளியே
இன்றே வந்திடு

சிந்து சிவதாஸ், ஐங்கரன் வீதி.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்



வேல் முருகன் வாணிப நிலையம்

VELMURUGAN TRADERS

தற்கால நவநாகரிக கட்டடங்களுக்கு ஏற்ப
சகல விதமான வர்ண பெயின்ட் வகைகளும்,
சுண்ணாம்பு மற்றும் கட்டடப் பொருள் விற்பனையாளர்.

இல.56A,295A மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9437



அனைவருக்கும் தித்தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்

கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதி பயிற்சிப் பாடசாலை)

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்
- வான், முச்சக்கரவண்டி, உழவு இயந்திரம் (டெக்டர்), அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் இரண்டு வருடம் பூர்த்தியானால் கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெறமுடியும்.
- கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி பெறலாம்.
- தவணை முறைக் கட்டணம்
- எழுத, வாசிக்க, தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை

கிளைகள்

பருத்தித்துறை
தொ.பே: 0214923201, 0714546958

சாவகச்சேரி:
தொ.பே: 0214923202, 021 2270700

கிளிநொச்சி:
தொ.பே: 021 228 5505, 0714546955

நெல்லியடி:
தொ.பே:021 300 6550, 0714546957

விசுவமடு:
தொ.பே:021 320 1515, 0714546955

சுன்னாகம்:
தொ.பே: 021 224 2022, 0714546956

தலைமைக் காரியாலம்:
226,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4353, 021 4923200, 0714546952, 0777225292





## இது கிரிக்கெட் நடை





கிளிநொச்சி நகரிலிருந்து நடைபவனியொன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமானது. கல்வி, கலாசார மற்றும் விளையாட்டு ஆகிய திறன்களை இலங்கை சிறுவர்களிடையே ஊக்குவிப்பதற்காகவே இந்த நடைபவனி இடம்பெற்றது.

இஙகிலாநது கிரககெட அணியின முனனாள தலைவர இயன பொததம மறறும இலஙகை கிரககெட அணியின முனனாள தலைவர மஹேல ஜயவரததன உளளிடட பலர இநத நடைபவனியில கலநதுகொணடனர. இலஙகையின கிரககெட பாரமபரியததைக கடடியெழுபபுவதறகான நடைபயணம ஒனறு நேறறு வெளளியனறு வடககே கிளிநொசசி நகரில இருநது தலைநகர கொழுமபு நோககி ஆரமபிககபபடடிருககினறது. கிளிநொசசியில ஆரமபமாகிய இநத முதல நாள பயணம மாஙகுளம மகாவிததியாலய மைதானததில செனறு நிறைவுறறது. அடுததடுதத தினஙகளில தொடரநது செலலும இநத நடைபயணம, தென மாகாணததில உளள சனிகமவில செனறு முடிவடையும எனத தெரிவிககபபடடிருககினறது.

# யாழ். -ஊர்காவற்றுறை வீதி புனரமைப்புக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை வீதியினை புனரமைப்பிற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக மாவட்ட ஒருங்கமைப்புக் குழுத்தலைவர் அலுவலகம் அறிவித்துள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரும் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமாகிய டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு அமைவாக, கடந்த 31ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் பண்ணை-ஊர்காவற்றுறை வீதியினைப் புனரமைப்பதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

இலங்கை அரசாங்கமானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 98 மில்லியன் அமெரிக்க டொலர்களை வடக்கின் பாதையை இணைக்கும் கருத்திட்டத்தின் கீழ் பாதைகளை புனரமைக்கவும் திருத்த வேலைகளை மேற்கொள்ளவுமென பெற வுள்ளதுடன் அவற்றின் ஒரு பகுதியை மதவாச்சி-மன்னார் தலைமன்னார் வீதி, யாழ்ப்பாணம பண்ணை- ஊர்காவற்றுறை வீதிகளின் புனரமைப்பு வேலைகளுக்கும் அபிவிருத்தி வேலைகளுக்கும் செலவிடப்படவுள்ளது. (எ-4)

# நியூசிலாந்துக்கு எதிரான இலங்கை அணி அறிவிப்பு

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள நியூசிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலிரண்டு போட்டிகளுக்குமான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அஞ்சலோ மத்தியூஸ் தலைமையிலான 16 பேர் கொண்ட அணியாக இது அறிவிக கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில் அண்மைக் காலத்தில் இலங்கை சார்பாகத் தொடர்ச்சியாக விளையாடி வந்த ஷமின்ட எரங்க சேர்க் கப்படவில்லை.

இக்குழாமில் புதுமுக வீரரான அஷன் பிரியஞ்சன, இலங்கை டெஸ்ட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திமுத் கருணாரத்ன ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். நவம்பர் 10-ம் திகதி ஆரம்பிக்கவுள்ள இந்தத் தொடரின் முதலிரண்டு போட்டிகளும் அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

அறிவிக்கப்பட்டுள்ள அணி விபரம்:

அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சந்திமால், லஹிரு திரிமன்ன, திலகரட்ண டில்ஷான், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, சச்சித்திர சேனநாயக்க, அஜந்த மெண்டிஸ், திஸர பெரேரா, நுவான் குலசேகர, சுரங்க லக்மால், குசால்ஜனித்பெரேரா, திமுத் கருணாரத்ன, விமுக்தி பெரேரா, ரங்கன ஹேரத், அஷன் பிரியஞ்சன.

# நியூஸ்ரார் பிறிமியர் லீக்; ஜொலிஸ்ரார் அணி வெற்றி

நியூஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்காக நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் 2 ஆவது ஆண்டாக நடத்தி வரும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இரண்டாவது சுற்றின் 4 ஆவது போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை 11 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் ஜொலிஸ்ரார் அணி ஸ்ரான்லி அணியை 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 20 ஓவர்களில் 7 இலக்குகளையிழந்து 152 ஓட்டங்களை பெற்றது.

சியாம்சன் 44, றொஸான் 45, குணதாஸ் 30 ஓட்டங்களைப்பெற்றனர்.

ஜொலிஸ்ரார் சார்பில் அருண், மதூஸான் தலா 2 விக்கெட்டுக்களையும் சைலேஸ், ராஜா, வாமணன் தலா ஒரு விக்கெட்டையும் கைப் பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 17.1 பந்து பரி மாற்றங்களில் 5 இலக்குகளையிழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது.

மாதுசன் ஆட்டமிழக்காது 50 (தொடரின் 47ஆவது அரைச்சதம்) ஓட்டங்களையும் சைலேஸ் 25 , நவயுகன் 22, வாமணன் 17 ஓட்டங்களைப்பெற்றனர்.

ஸ்ரான்லி அணி சார்பில் கஜதீபன் 2 இலக்கினையும், றோசான், வசி, உதயன் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

இச் சுற்றுப்போட்டி தொடரில் ஜொலிஸ்ரார் அணி 15.63 (5 போட்டிகள்) புள்ளிகளையும் ஸ்ரான்லி அணி 14.82 (5 போட்டிகள்) புள்ளிகளையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத் தக்கது.

# வீடுகள் இடிக்கப்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு முறையிட்டார்.

வலிகாமம் வடக்கில் பொதுமக்களின் வீடுகள் இடித்தழிக்கப்படுவது யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பாரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக இதன்போது சம்பந்தன் குறிப்பிட்டார்.

இதனையடுத்தே ஜனாதிபதி யாழ்ப்பாண கட்டளை தளபதியுடனும், கொழும்பில் உள்ள இராணுவத் தளபதியுடனும் தொடர்பு கொண்டு இராணுவத்தின் நிர்மாணப் பணிகளை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளார் என்று லலித் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் விரைவில் இது விடயத்தில் தாம் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளதாக சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

வலிகாமம் வடக்குப் பகுதியில் கடந்த சில நாட்களாக பொதுமக்களின் வீடுகள் இராணுவத்தினரால் இடித்தழிக்கப்பட்டு வருகிறது. இதனையடுத்து பொதுமக்கள் செய்த முறைப்பாட்டையடுத்து பல உயர் அதிகாரிகள் அதனை நேரில் சென்று பார்வையிட்டனர். எனினும் வீடுகள் இடிக்கப்படுவதை இராணுவத்தினர் தொடர்ந்து மேற்கொண்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# வீரர்களுக்கு பதில் பந்துவீச்சு மெஷினையே பயன்படுத்தலாமோ!

## தோனி ஆதங்கம்



வெறுமனே கைகளை சுழற்றி பந்துகளை வீசுவதற்குப் பதில் பந்துவீச்சு மெஷினை மைதானத்தில் பயன்படுத்தலாம் என்று இந்திய பந்துவீச்சாளர்கள் சிலர் நினைக்கின்றனர் என்று அணித்தலைவர் டோனி தெரிவித்தார்.

இந்தியா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இதுவரை நடந்த போட்டிகளில் இந்திய அணி 232, 362, 303, 351 ஓட்டங்கள் எடுத்தன. அவுஸ்திரேலிய தரப்பில் 304, 359, 304, 295, 350 என ஓட்டங்கள் எடுக்கப்பட்டன.

இது குறித்து இந்திய அணியின் அணித் தலைவர் தோனி கூறுகையில்,

ஒருநாள் போட்டிகளின் களத்தடுப்பு விதிமுறையில் செய்த மாற்றம் காரணமாக பந்து வீச்சாளர்களுக்கு சவால் ஏற்பட்டுள்ளது.

மூன்றரை மணி நேர துடுப்பாட்டத்தில் பவுண்டரி, சிக்சர்களாக அடிக்கப்படுவதால் பந்துவீச்சாளர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இப்படி வெறுமனே கைகளை சுழற்றி பந்தை எறிவதற்குப் பதில், பந்துவீச்சு "மெஷினை" களத்தில் பயன்படுத்தி விடலாம் என்று நினைக்கின்றனர். புதிய விதிகளில் போதியளவு போட்டிகளில் இன்னும் பங்கேற்கவில்லை.

சில நேரங்களில் "பிளாட்" ஆடுகளம், பனிப்பொழிவு இருந்துவிட்டால் பந்து வீச்சாளர்கள் நிலை பரிதாபம் தான். 15 ஓவர்கள், துடுப்பாட்டம் "பவர் பிளே" எல்லாம் மீதமுள்ளது. ஆனால் ஓட்ட எண்ணிக்கையைப் பார்த்தால் 220, 230 என்று உள்ளது.

இதை ஜீரணிக்கவே முடியவில்லை. ஏனெனில், இது இயற்கையானது அல்ல. புதிய விதிகளால் இப்படி உள்ளது. இரு புதிய பந்துகள் பயன்படுத்தப்படும் நிலையில், ஆடுகளத்தை நன்றாக அமைத்தால் 150 முதல் 180 ஓட்டங்கள் எடுப்பதே சிரமம் ஆகிவிடும். இப்போதைக்கு சற்று பொறுத்திருந்து பார்க்கலாம்.

களத்தடுப்பு கட்டுப்பாடுகள் காரணமாக ஒருநாள் போட்டிகளில் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சிரமம் அதிகமாகி விட்டது. டெஸ்ட் போட்டிகள் இதிலிருந்து முற்றிலும் வித்தியாசமானது என்றும் களத்தடுப்பு கட்டுப்பாடு குறைவு என்பதால் இவர்கள் கூடுதல் நம்பிக்கையுடன் பந்துவீசுவர் எனவும் கூறினார்.


**வீடு வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி , கில்னர் லேனில் மாடி வீட்டின் கீழ்த்தளம் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0779286464

## தமிழர் பிரச்...

வாழ்ந்து அதனை நிலை நிறுத்தப் போகின்றோமா?இல்லையா?என்பது தான் கேள்வியேயொழிய நான் அமைச்சர் ஹெகலியவிற்கு மாற்றுக் கருத்தை கொடுத்தும் அவர் எனக்கு மாற்றுக் கருத்தைக் கொடுத்தும் விவாதம் நடத்துவதில் முக்கியத்துவம் இல்லை .

விவாதத்தில் எனக்கு நல்ல பரிச்சயம் இருக்கின்றது. ஆனால் ஹெகலியவுடன் விவாதம் நடத்தவேண்டிய அவசியம் எனக்கு இல்லை. ஆனால் ஒன்றை மட்டும் கூறவிரும்புகின்றேன் ஒத்துழைப்பையும் ஒருமைப்பாட்டையும் இந்த நாட்டில் ஏற்படுத்தவே நாம் பாடுபடுகின்றோம்.

எமது மக்கள் தான் போரினால் அதிகம் கஷ்டப்பட்டு இருக்கின்றார்கள். அவர்கள் வாழ்வாதாரத்தை இழந்து இருக்கின்றார்கள். போரினால் பாதிக்கப்பட்ட பலர் அங்கவீனர்களாக வாழ்ந்து வருகின்றார்கள் தங்களுடைய குடும்பத்திலுள்ளவர்களை இழந்த நிலையில் அவலப்பட்டு வருகின்றார்கள்.ஆகவே பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். எங்களுடைய மக்களின் பிரச்சினைகளை நாங்கள் எடுத்துக்கூற வேண்டியுள்ளது. அதுசம்பந்தமாக உரிய நடவடிக்கையினை ஜனாதிபதி எடுக்க வேண்டும். எங்களுடைய பிரச்சினைகளை பக்கச்சார்பாக எடுத்துக்கொள்வது பிழையான அணுகுமுறை.

மேலும் இராணுவம் இங்கு இருப்பதால் எங்களுடைய நாளாந்த வேலைகளை செய்ய முடியாதுள்ளது. ஆகவே இராணுவத்தை வடக்கிலிருந்து படிப்படியாகவேனும் வெளியேற்றுமாறு கோருகின்றோம். அத்தோடு இராணுவத்திலே இருந்து விலகிய ஒருவர் வடக்கு ஆளுநராக பொறுப்பேற்று இருப்பதனால் அதாவது இராணுவத்தில்ஆணையிட்டு பழகியவர் மக்களுடைய பிரச்சினைகளை புரிந்து வைத்திருப்பாரோ, அந்தப்பிரச்சினைக்கு முகம்கொடுப்பது என்பது அவருக்கு சரியாக தெரியுமோ? புரியுமோ? என்ற காரணத்தினாலேயே இராணுவத்துடன் சம்பந்தப்பட்ட ஒருவர், ஆளுநராக இருப்பது சரியாக இருக்காது என்று கூறுகின்றோம்.

இதனை ஹெகலிய போன்றவர்கள் சரியில்லையென்று வியாக்கியானம் செய்வதோ அல்லது எங்களுடைய கோரிக்கை தங்களுக்கு எதிரானது என்று கருதுவதோ எங்களையே பாதிக்கும். இருப்பினும் அதனை கூறிவைக்க விரும்புகின்றேன் என்றார்.

(எ-6)

## குற்றங்கள்...

செயல்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படுவதுடன் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையிலுள்ள உறவுகளை பலப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-4)

## தாக்குதலுக்கு ...

தென்னிலங்கை நபருக்கு தலையில் அடித்துள்ளார். இதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் கிளி. மாஞ்சோலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனளிக்காத காரணத்தால் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார்.

கொலை தொடர்பான விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருவதோடு சந்தேக நபரினை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் தெரியவருகின்றது. இதே வேளை குறித்த குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிர் பிரியும் தறுவாயில் இருந்த போது யாழ். போதனாவின் பாஸ்நடைமுறையினை காரணம்காட்டி அவரது மனைவியினை பார்வையிட அனுமதியளிக்கவில்லை என சடலத்தினைப் பரிசோதனை செய்த யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிரேம்குமாரிடம் மனைவியினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-4-6)

## உயிருடன் பிடிபட்ட...

இசைப்பிரியா படுகொலை செய்யப்பட்டு கிடக்கும் காட்சிகள் ஏற்கெனவே வெளியாகியிருந்தன. ஆனால் இசைப்பிரியா போரிலேயே கொல்லப்பட்டார் என இலங்கையின் படைத்துறை அமைச்சு செய்தி வெளியிட்டிருந்ததுடன், சனல் 4 வெளியிட்ட புகைப்படங்களையும் நிராகரித்திருந்தது.

இந்நிலையிலேயே இலங்கை ராணுவத்தினரால் இசைப்பிரியா உயிரோடு கைது செய்யப்பட்ட காணொளியை சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது. சேற்று பிரதேசமொன்றில் விழுந்து கிடக்கும் இசைப்பிரியாவை இராணுவத்தினர் வெள்ளைத் துணி ஒன்றைப் போர்த்தி அழைத்துவரும் காட்சி இக்காணொளியில் பதிவாகியுள்ளது. இசைப்பிரியாவை, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகள் என இராணுவத்தினர் தெரிவிப்பதும், அதனை இசைப் பிரியா மறுப்பதும் இக்காணொளியில் தெளிவாகவே பதிவாகியுள்ளது.

இலங்கை அரச தரப்பின் தொடர்ச்சியான பிரசாரத்திற்கு மத்தியில், இசைப்பிரியா இராணுவத்தினரால் உயிருடன் பிடிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளது இக்காணொளி மூலம் மேலும் உறுதியாகியுள்ளது. சேற்றில் விழுந்துகிடக்கும் அவரை இராணுவம் வெள்ளைத் துணி ஒன்றைப் போர்த்தி அழைத்து வருவதும், இதே வெள்ளைத் துணி போர்த்தப்பட்ட நிலையிலேயே இசைப்பிரியா படுகொலை செய்யப்பட்டு வீசப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 9-ம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் உட்பட பல்வேறு சர்வதேச தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை இம்மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டாம் என தமிழகத்தில் போராட்டங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில், சனல் 4 வெளியிட்டுள்ள இப் புதிய ஆதாரம் மாநாட்டில் கலந்துகொள்ள திட்டமிட்டுள்ள சர்வதேச தலைவர்கள் மீதான அழுத்தங்களையும் அதிகரிக்கும் என்றே கருதப்படுகிறது

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சனல் 4 தொலைக்காட்சியின் தயாரிப்பாளர் கலும் மக்றே இக் காணொளி, இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை பகிஷ்கரிக்க வேண்டும் என்று குரல்கொடுப்போரின் குரலை வலுப்படுத்தியிருப்பதாக தெரிவித்துள்ளார். (எ-4,2)


● போட்டோ கொப்பி இருபக்கம் 2/-
● டிஜிற்றல் கலர் பிறிண்ட் 10/- முதல்
அனைத்து பிறிண்டிங் வேலைகளையும் குறைந்த செலவில் சிறந்த முறையில் செய்திட
**கங்கை பிறிண்டேர்ஸ்**
கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரிக்கு முன்பாக)
தொடர்புகளுக்கு :
**0776184567**
(கல்வி மேம்பாட்டுச் செயற்திட்ட சேவை) (4410)

**காணி விற்பனைக்கு**
சிவராசபதி சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாயில் 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
**0773720154, 0776720792** (4401)

**மாடிக்கட்டடம் வாடகைக்கு**
யாழ். நகரின் மத்தியில் ஆஸ்பத்திரியின் பின் வீதியில் இல. 275 மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம் வாடகைக்குண்டு.
1800 சதுர அடி உள்ள 3 மாடிகள்.
தனி மாடியாகவோ / முழுக் கட்டடமாகவோ பெறலாம்.
தனியார் நிறுவனம் / கடைகளுக்கு மிகவும் உகந்ததும். (4406)
தொடர்புகளுக்கு : **0771363797, 0776219536**

**Dutch, Deutsch, French**

தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) புதிய பிரிவுகள் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.
* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
**Vivekananda Academy**
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393 (C-5327)

எமது **தீபாவளி** நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்

**கஜமுகன் டென்ரல் கிளினிக்**
ம.மகா வித்தியாலய வீதி, நெல்லியடி.
(இலங்கை வங்கிக்கு அருகில்)
தொடர்பு : **021 226 2888** (C-5341)



(சி-5318)

அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்
**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்
**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிறபகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months
**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◇ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◇ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◇ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◇ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
**Young Learners for English (YLE)** [வயதெல்லை : 7 - 12]
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்
Batch - 1 03.11.2013 | Batch - 2 04.11.2013 | Batch - 3 09.11.2013 | Batch - 4 16.11.2013 (சி-5328)
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

**தீபாவளியை முன்னிட்டு சென்னைக்கு**

**18500/=** +Tax
4Days 3Night
விமான பற்றுச்சீட்டு. போக்குவரத்து தங்குமிடவசதி அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளது (சி-5344)
**Nation Popular Travels & Tours**
#128,Brown Road, Jaffna
**0214 920 920**

**திருமணத் தேவைக்கான கார் வாடகைக்கு விடப்படும்**
தொடர்புகளுக்கு:
0771950228,
021 222 8984
0776152992

இல.44, சங்கிலியன் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். (C-5342)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.